உ

பரமபதிதுணை.

சிறந்த ஆயுள்வேத பண்டிதர்களால்
உபயோகித்துவரு மவற்றுக்கிணங்கிய

வைத்திய

கைமுறைகள்

முதற்பாகம்

இஃது
செழுமணவை

நல்லண்ண பரிதேசி

அவர்களனுக்கிரகத்தின்படி
எழுதி முடிவுபெற்று.

திருமணவூர்

முனிசாமிமுதலியாரால்

சித்தூர்
வீராசாமிநாயுடுகுமாரர்

கேசவலுநாயுடு

அண்டுபிரதர்ஸ அவர்களது,
வித்தியாவிநோத அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது

—*—

1896.

சேவுமயிலுந்துணை.

முகவுரை.

சராசரமனைத்துங் கண்களாகக் கொண்டிருக்கும் இப்பூமண்டலத்தில் கண்ணெல்லாம் வல்லமுத்தர்களாகிய பதினெண்சித்தர்களால் திருவாய்மலர்ந்தருளிய பெருமைபெற்ற வைத்தியசாஸ்திரமென்னும் ஆயுர்வேதத்தைத் ஆய்ந்தெடுத்த நிபுணர்களாகிய பண்டிதசிரோமணிகள் கையாடிவந்த மெய்யானமுறைகள் அளவிறந்துள்ளதாயின் அவற்றுள் எம்மால் கிடைத்தமட்டில் சேகரித்த சிலமுறைகளை "சென்னமணவை" நல்லண்ணபரிதேசியாரவர்கள் முன்னிலையில் பரிசோதித்து அய்யாரவர்கள் மருகருமாணாக்கருமாகிய மஹா-ஸ்ரீ, திருமணஞ்சூர் "முனிசாமி முதலியாரால் அனுபவமாகக் கண்டறிந்து சுருக்கமாயும் யாவரும் எளிதில் உணரும்படியாயும் நானது புத்திக்கெட்டியவாறு தமிழ்ப்படுத்தி வைத்திய கைமுறைகள் என்னும் பெயரமைந்து அச்சிடலாயிற்று. இந்நூலை யாதொருவரும் எனது உத்திரவின்றி எந்த பாஷையிலுமாவது சொற்களையும் முறைகளையும் முன்பின்னுவது எவ்விதத்திலும் அச்சிடக்கூடாது.

1 - புத்தகம் விலை	0 8 0
வி - பி சார்ஜ்	0 3 0

10 - புத்தகம் ஒரேதடவையில் வாங்கினால்

1 - புத்தகம் கமிஷன்கொடுக்கப்படும்

வியாபாரிகட்கு தகுந்த லாபங் கொடுக்கப்படும்.

உ

கடவுள் துணை.

சிறந்த ஆயுள்வேத பண்டிதர்களால்
உபயோகித்துவரு மவற்றுக்கிணங்கிய
வயித்திய

கைமுறைகள்.

நெடுமாற்றுதி.

துப்பபொன்மகள் தொட்டுமகிழுமால்
வையமேழும் வளர்த்தநெடியமால்
செய்யபாதம் சிரம்படப்போற்றியே
கைமுறைத்தொழிற் காசினிக்கோதுவாம்.

காப்பு.

பரிதிமதியானபர வெளியேகாப்பு
பஞ்சமுகமாகிநின்ற வொளியேகாப்பு
கருதரியமும்மூர்த்தி பாதங்காப்பு
கருணைவளர்சிவகாமி கமலங்காப்பு
அரியபலமறையுதவும் வாணிகாப்பு
ஆனைமுகனறுங்கோடு முருகன்காப்பு
துரியநிலைகடந்துநின்ற சித்தர்காப்பு
தொல்லுலகினாதாக்கள் பாதங்காப்பே,

பாதமேகாப்பாக பணிந்துவாழ்த்தி
பாரிலுள்ள மானிடர்க்குப் பழயகன்ம
தோஷத்தால் வரும்பிணிகள் தீரவேண்டி
தொந்தரையொன் றில்லாமல் கிரைகணிக்கி

பேதமற்றுத் தாம்நாமே செய்துக்கொள்ள
பெரியோர்கள் அருகிருந்து பேசும்போலச்
சாதகமாம் கைமுறைகள் யாவும்கோர்த்து
சாதித்த பின்னூலின்சார்புகேளே. 2

சார்பாகக் கண்டகாண் டத்தின்வாறு
சகலபிணி வருங்குறிகள் சாற்றிப்பின்னே
நேர்பாக மாத்திரையின் வகுப்பிதேறும்
நிலையான கட்டுசில செந்தூரங்கள்
கார்போன்ற வெண்ணெய்வகை தயிலத்தோடு
கைகண்ட சூரணங்கள் இரதபாகம்
நீர்போன்ற கியாழமுத லாதிபாகம்
நிலையாகக் கைமுறை நிகழ்த்துவோமே. 3

நிலையான பின்னூலின் கர்த்தராலே
நிலத்திலுள்ள மானிடர்கள் பிழைக்கவேண்டி
மலையான நோய்களெல்லாம் அறுப்போல்நீக்க
மானுக்கள் கைகண்ட மருந்தின்மார்க்கம்
சிலைபோற்ற அநுபோக வயித்தியந்தான்
சொன்னமொழி தப்பாது திரண்டுகொண்டும்
தலையான அந்நூலைப் பார்த்தபேர்கள்
தாரணியில் வென்றுநின்று குருவாவாரே. 4

குருவருளால் பாலவயித் தியநாதனென்று
கூறினேன் மக்களது துன்பநீக்க
பருமதி ஊர்வசியின் வயித்தியபிட்சா
பகர்ந்திட்டேன் வெகுஞானப் பண்டிதர்காள்
அருணகிரி வள்ளலது அன்புமாலை
ஆதரையிற் சிவனேசர் ரசிக்கச்செய்தே
பெருமைதரு நீதிநெறி வழுவாவர்
விராடபர்வ அம்மானை விளம்பினேனே. 5

விளம்பினேன் சித்தகவி கோடாகோடி
விசித்திர பாட்டிதனை வணங்குமுன்

வளம்பொருந்தும்சொற்பனங்கள் விழிம்புகர்க்கமாம்
வைமான.வைவரியம் வரியநாலும்
இளம்பிறைசேர் விழிநுதலார் ருதுநூல்சாஸ்திரம்
யெண்ணரிய பன்னூல்களியற்றிப்பின்னால்
அளவிரந்த சித்தர்களால் ஆயுர்வேதம்
ஆய்ந்தெடுத்துக் கைமுறையா யருளினேனே.

அருளினே னென்றதிறற்பெரியோனல்ல
அனுக்கிரகம் முதியோரர் பெற்றோனல்ல
இருளாலே பலநூலுங் கற்றோனல்ல
யிணக்கமறிந் தொழுகுநெறி யுற்றோனல்ல
சிறுவருக்கும் சிறுவன்சிறு மனவுருத்த
சிறுவன்முனிசாமியின் சிற்றறிவினாலே
குரவருக்கு நேராகச் செய்தபின்னால்
குற்றமதை மன்னிப்பார் குலத்தினோரே.

குலமென்றால் சாதியிலே உயர்ந்தோனல்ல
குரவரென்றார் கான்றிரியும் வில்லியல்ல
பலமென்றால் சதுரங்க சேனையல்ல
பரதேசி யென்றக்காற்றியாகியல்ல
நலமென்றால் இந்திராதி போகமல்ல
நாமென்றால் கருவிபட்டயாக்கையல்ல
தலமென்றால் தெய்வாதி கோயிலல்ல
தன்னைத்தான் கண்டவரே தரிசிப்பாரே.


பாரண்டமீரேழாய் நின்றஜோதி
பற்றற்ற நாதாக்கள் கண்டஜோதி
பேரண்ட சிறுவீட்டிடைக்குஞ்ஜோதி
பின்கலையா மிடகலையாய் புரக்குஞ்ஜோதி
சீரண்டத் திருநடனஞ் செய்யுஞ்ஜோதி
சகலவுயிர் தாந்தாமா யாகுஞ்ஜோதி
நீரண்டபிண்டமட்டும் நிலைத்தஜோதி
நீங்காத துயில் நீற்று நீயேபாரே

பார்ப்பதற்கு நாதாக்கள் கிருபைவேணும்
பழனியின் விட்டகுறை பலிக்கவேணும்
நிற்பதற்கு மனந்தானே நிலைக்கவேணும்
நின்றாலும் சாதிக்குந் திரமைவேணும்
பூற்பதற்குப் பக்குவம்வந் தடுக்கவேணும்
பூமியிலே மாண்டவர்போல் பொருமைவேணும்
காற்பதற்கும் யெவ்வுயிற்கும் மருளைவேணும்
கைமுறையின் றெழிற்கோ ரணங்களாமே.

வயித்திய கைமுறைகளினது

பாயிரம்

முற்றிற்று.



உ

கடவுள்துணை.

வயித்திய

கைமுறைகள்

முதலாவது

விரேசனவகுப்பு.

சுகபேதி.

குத்துநிலாவரை	பலம் -	௫
சோம்பு	,,	௮
சுக்கு	,,	௮
கொத்தமல்லிவிரை	,,	௧
சீருஞ்சுக்கண்டு	,,	௧

இவைகளை யிடித்து வஸ்திரகாயஞ்செய்து அரைபடி ஜெலத்திலேகலந்து அடுப்பேற்றி ஆழாக்குயெட்டுமாய் காய்ச்சியிறக்கி கொஞ்சம் பசும்பாலவிட்டரைத்து சாப்பிடவும் கற்கண்டுதூள் கியாழமிறக்காயில் போடவும் சகுணமாகபேதியாகும் இதைப்பா யாசமிராது குப்பு அல்லது கத்தரி, யவரை முருங்கைப்பிஞ்சு யிளகு ரசம் சாப்பிடவும் மாலையில் யிளகுகடலையிட்டு கியாழம்சாப்பிடவும்.

குளிர்ச்சிபேதி.

ஆமணக்கெண்ணை	பலம் -	௧
பேயன்வாழைப்பழம்	,,	௨
இந்துப்பு	,,	௩

[illegible]

[illegible]

[illegible] பேதி.

[illegible]

[illegible] பேதி.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சுக்கு கோரோசனைக்கல் வகைப்பட்டதைச் செட்டி தெருக் கொண்டு கல் லிலரைத்து வெந்நீரில் குடிப்பிக்கிற முறை வழியாக்க தேக ம் சொன்னவு.

நீர்கோவை தைல வேது.

சொறுப்பட்டை பச்சிலை சுரப்பாக்குகள் சேர்த்து அக்கா செங்கிளாவிச் சுருப்பி (உ) சிட்டிக்கை சுக்கணி சேர்த் ட்டு காய்ச்சவும் வேதிக்கப் பக்கமாக்கியே பக்குவமாகச் செய்ய வும்.

வேர் வேது வேது.

புளியிலை	பலம்	௧
பச்சைமிளகாய்	,,	௨
நொச்சிப்பட்டை	,,	௩

இவை இங்ஙனம் இரண்டு சேர்த்து அரைப்படி ஜலம்விட்டு நீர் அரைப்படி அளவு ஆற்றிக் கொடுக்கக் காய்ச்சி வைத்திருந்து கவிழ்த்து விட்டு இந்தப்படி பொடிக் கப்பொட்டு கஷாயம் சாப்பிடவும் பத்தியம் அரிசிக் கஞ்சியும் சாப்பிடவும் பகலில் ஒரு நேரம் பாலுஞ்சாதமும் பார்ப்பான் கொடுத்து பத்தியமாக நடத்தவும் பொடிப் பொட்டு வேதுஞ் சொன்னவும்.

வெந்நீர் வேது.

வெந்நீரில் வைத்து சொல்லப்பட்ட நீர்விட்டு உடைத்த ஜலத்தில் எதிர்விட்ட தலைக்கேற்ற குணம் காரம் பழம் கட்டி பிழிந்தால் கொடுக்க (ஐ) யாரும் வெந்நீரில் கலந்து சாப்பிடவும்.

இழாமுபேதி.

இந்துப்பு	விராகனிடை	௧
கனிப்பாக்கு	,,	௨
கடுகுரோகணி	,,	௩
கடுக்கா	,,	௪
நிலவாரை	,,	௫
கருவேலங்கொழுந்து	,,	௬
சற்றுமுஞ்சாறு	,,	௭
பிரமியிலை	,,	௮

இவைகளைப்பிடித்து (௮) படி ஜலத்திலிட்டு காலிலொன்றாய் வற்றக்காய்ச்சி சாதுதிரம் வடிகட்டி கொடுக்க நன்றாய்பேதியாகும்.

மலக்கட்டுபேதி.

பூவரசம் பட்டையில் ஆவின்பால் விட்டிடித்து சாறுதிரம் வடிகட்டி கொடுக்க பேதியாம் மலக்கட்டு ஜலக்கட்டு தீரும்.

சிரங்குபேதி.

சிறு செருப்படையும் மிருள்ளியும் சமன் கொண்டிடித்து சாறுவாங்கி ஆதிரம் வடிக்கட்டி அரையாழாக்கு கொடுக்கபேதியாம் மேகசிரங்கு முதலானதும் தீரும்.

கிருமிபேதி.

புரசம் விரை (௨) கொண்டுவந்து சாணிப்பிற்செருகிவைத்து காலையிலெடுத்து மேற்றோலை நீக்கி பசும்பாலி லரைத்து கொடுக்க பேதியாம் வயற்றிலுள்ள பூச்சிகள் கண்டேறிவிழும்.

இதுவுமது.

கிருமிகள் பேதி.

பிரண்டைவேர், வேப்பீர்க்கு, புரசம்வி..., ஓமம், இவை கள் சமன் கொண்டு யிடித்து வெள்ளாட்டு நீரில் கியாழம் செய்து கொடுக்க வயிற்றுக்கிருமிகள் பந்து பந்தாய் விழும்.

இதுவுமது.

கிருமிகள் பேதி.

சாக்கொன்றை கொழுந்தை அவித்து பிழிந்து தண்ணீ ரில் சீனிகலந்து அரிக்கால்படி கியாழத்திற்கு கொடுக்க கிருமிக ள் விழும்.

இதுவுமது.


கிருமிகள் பேதி.

மிதிபாகயிலை ஒருபிடி மிளகு, (க' இதை செமெழ அரை த்து கெச்சக்காய் பிரமாணம்கொடுக்கபேதிக்கிருமிகள் விழும்

விரோசனவகுப்பு.

முற்றிற்று.

குருமுன்னிற்க.



கடவுள் துணை.

இரண்டாவது

மாத்திரை வகுப்பும்

அல்லது குளிகை யெனக்கொள்க.

—[-][*][-]—

கட்டுவாதி மாத்திரை.

அதிவிடையம்	விராகனெடை	௧
வசினி	,,	௧
சுக்குக்ஞான்	,,	௨

இவைமூன்றுங் கல்வத்திலிட்டு பழச்சாறுவிட்டு மூன்றுஜாமம் அரைத்து உடல்வீதம் மாத்திரைசெய்து பெரியோர்க்கொன்று சிறுவர்களுக்கு ½ மாத்திரையாக கொடுக்கவும். பிறசவிக்கயிக்கவும் கண்டவர்க்கள் விடாமல் இலைமொறுவிலா ருசிக்கு சட்டுயிலிட்டு சேப்பிட்டு முக்காலுக்கு நூன்செய்து கசோதத்தின் பிணைக்குன்னவும்.

மகாவேகக்கட்டுவாதிகுளிகை.

ஜாதிக்காய்	விராகனெடை	௧
ஜாபத்திரி	,,	௧
லவங்கப்பூ	,,	௧
மாசிக்காய்	,,	௧
சீரகம்	,,	௧
லவங்கப்பூ	,,	௧
கசகசா	,,	௧
வெங்காரம்	,,	௧
அதிவிடையம்	,,	௧

[illegible]	,,	க
[illegible]	,,	க

இவைகளை [illegible] உலர்த்தியிடித்து கஷாயம் செய்து [illegible] (௪) நாழிகை அரைத்து [illegible] [illegible] வைத்துக் கொண்டு [illegible] [illegible] வேளைகளில் [illegible] கொடுக்க [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

[illegible] மாத்திரைக் குளிகை.

[illegible]	வராகனிடை - க	
[illegible]	,,	க
[illegible]	,,	க
மிளகு	,,	க
[illegible]	,,	க

இவைகளை [illegible] [illegible] கல்வத்திலிட்டு [illegible] [illegible] அரைத்து (௨) நாழிகை [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] (௨) [illegible] [illegible] [illegible] [illegible].

[illegible] குளிகை.

[illegible] [illegible] [illegible] உலர்த்தி (௩) [illegible] [illegible] அரைத்த ஆமணக்கெண்ணெயோடு [illegible].

[illegible] வராகனிடை-ச

மிளகு	,,	ரு

பூரம்	,,	உ
திப்பிலி	,,	க

இவைகளை கல்வத்திலிட்டு முலைப்பால்விட்டரைத்து மிளகளவு உருண்டைசெய்து நிழலுலர்த்தி வைத்துக்கொண்டுதேனில் (க) மாத்திரை அல்லது (உ) மாத்திரையிட்டவும் இச்சாபத்தியம் பலவிதசுரமும் தீரும்.

இராஜயோக்கிய

விரோசனக்குளிகை,

இந்துப்பு	விராகனிடை	க
கடுகுரோகணி	,,	உ
வாளம்	,,	ரு.

இவைகளுவத்திலிட்டு சுக்குநீராமும் விட்டரைத்துசுண்டைக்காய் விதம்குளிகைசெய்து நிழலுலாத்தி வைத்துக்கொள்ளவும் ஒருகுளிகையெடுத்து சக்கரையில வைத்துசாப்பிடவுமசொகுசாய்பேதியாகும் பேதிநிற்க வேணுமாகில்குளிர்ந்தஜெலத்தில காலலமபவும நிற்கும் இச்சாபத்தியமாகபுசிக்கவும்,

சிசுகட்டுவாதிகுளிகை,

ஒருஜாதிக்காயை துளைசெய்து பணவிடை அபினியடைக்கு மஞ்சள் கவசஞ்செய்து (க) வரட்டியில் புடமிட்டுமஞ்சள்வெந்தபிறகெடுத்து கவசம்நீக்கி முலைப்பால்விட்டு அரைத்துமிளகளவுமாத்திரைசெய்து வைத்துக்கொண்டு குழந்தைகளுக்குகாணுமபேதி கழிச்சல்கிராணி அஜீரணக்கழிச்சலயிலவைகட்குஒருமாத்திரை முலைப்பாலிலிடவும் தீரும்.

சுரக்குளிகை,

தாளகம்	பலம்	⅛
துத்தம்	,,	⅛
நாபி	,,	⅛
வெண்காரம்	,,	⅛

இவைகளை கல்வத்திலிட்டு பாலைச்சார்விட்டு நாளொன்றுக்கு ௫-ஜாமமாக ௫-நாளறைத்து பயறளவுமாத்திரை செய்து நிழலுலர்த்தி சீசாவில வைத்துக்கொள்ளவும் தேன்முலைப்பால் இதுகளில் ௧-௨-மாத்திரைவிட பலவித சுரங்களும் ௨-௫-வேளையில் தீரும் பத்தியம் சாதத்தில் உரோமறித்து வைக்கவும்.

சுரக்கோடரிமாத்திரை.

தாரம்	களஞ்சி	௫
கெந்தி	,,	௫
ரசம்	,,	௫
நாபி	,,	௫
சுக்கு	,,	௬
திப்பிலி	,,	௬
மிளகு	,,	௬
கடுக்காய்	,,	௬
தான்றிக்காய்	,,	௬
நெல்லிக்காய்	,,	௬

சுக்குமுதல் ஆறுவகையும் வெயிலுலர்த்தியிடித்து பொடித்து வஸ்திரகாயம் செய்து யாவும் ஒன்றுபட நிறுத்தி அவ்விடைக்கு சமன் ஏளம் நிறுத்தெடுத்துக்கலந்து கல்வத்திலிட்டு கைவிடாமல நாலுஜாமம் அரைத்து மிளகளவுமாத்திரை செய்து நிழலுலர்த்தி சீசாவிலவைத்துக்கொள்ளவும் வேண்டியபோது தேகதிடமும் நோய்திடமும் அறிந்து ௧-அல்லது ௨-மாத்திரையெடுத்து தேன் முலைப்பால் சர்க்கரை சுக்குக்கியாழம் இதுகளிலொன்றிலேனுமிட ௨-௫-வேளையில் எவ்வித சுரங்களுந்தீரும் இச்சாபத்தியம்.

அக்கினிகுமாரக்குளிகை.

வெங்காரம்	பலம்	௨
நாபி	,,	௨

கெந்தி	,,	௨
சூதம்	,,	௨
மிளகு	,,	௧
யெருக்கின்வேர்பட்டை	,,	௧

இவையாவும் பிரண்டைசார்விட்டு தினம் ஒருஜாமமாக ௮-நாளரைத்து மிளகளவுமாத்திரைசெய்து நிழலுலர்த்தி சீசாவில்வைத்துக்கொள்ளவும் ஜன்னிக்கு யிஞ்சிச்சாற்றிலும் மாலைசுரங்களுக்கு பஞ்சமூலக்கியாழத்திலும் சிலசாத்தியசுரம் தலைவலி சீதளம் இதுகளுக்கு தேன் மூலைப்பால் இதுகளில் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

வைரகோடாசுழிக்குளிகை.

தாரம்	விராகனிடை	௧
ரசம்	,,	௧
கெந்தி	,,	௧
கெவுரி	,,	௧
வெள்ளை	,,	௧
லிங்கம்	,,	௧
வங்காளப்பச்சை	,,	௧
வெண்காரம்	,,	௧
அக்கிராகாரம்	,,	௧
சுக்கு	,,	௧
திப்பிலி	,,	௧
மிளகு	,,	௧
இருவி	,,	௧
கடுக்காய்	,,	௧
நெல்லிக்காய்	,,	௧
தான்றிக்காய்	,,	௧
வாளம்	பலம்	௧

இவைகளில் சூரணம் செய்யவேண்டியதுகளைச்செய்து மற்றயசரக்குடன்சேர்த்துக் கல்வத்திலிட்டு கொச்சிச்சாற்றில் ஒரு

ஜாமம் அரைத்து கையாந்தகரைச்சாற்றி லொருசாமமரைத்து துளசிச்சாற்றிலொருசாமம் இப்படி ௩-நாளைக்கு மூன்றுசாமம் அரைத்து வெற்றிலை-௭, பாக்கு-௫, இதைஉரலிலிட்டிடித்து பிழிந்தசாற்றில் மூன்றுசாமம் அரைத்து கடைசியில்வெள்ளாட்டுப்பாலில் ஒருசாமம் அரைத்து மிளகளவுமாத்திரைசெய்து நிழலுலர்த்தி சீசாவில வைத்துக்கொள்ளவும் அடியில்வரும் அநுபானத்திற் சம்பந்தப்படுத்தி அந்தந்த வியாதிகட்குபிரயோகிக்கவும்.

அமரத்திற்கனுபானம்.

ஒருமாத்திரையை மூலைப்பாலிலிழைத்துக்கொடுக்க நேத்திரத்திலுண்டாகும் புதியமறைப்புகள் தீரும்.

குளிருக்கனுபானம்.

இரண்டுமாத்திரையை மிளகுத்தூளில்கொடுத்து உடனே வெந்நீர்கொடுக்க விடாத குளிர்நடுக்கல்தீரும்.

பித்தத்திற்கனுபானம்.

இரண்டுமாத்திரையை சர்க்கரையில்கொடுக்க பித்தம் பித்தகாசம் இவை நீக்கும்.

செரியாமைக்கனுபானம்.

இரண்டுமாத்திரையை ஓமத்தூளில் சேர்த்துக்கொடுத்து உடனே வெந்நீர்கொடுக்கவும்.

சாதாரணபித்தவனுபானம்.

ஒருமாத்திரையை சீரகத்தூளில் சேர்த்துகொடுக்க பித்தமயக்கம் வாயூறல் இவை தீரும்.

விஷத்திற்கனுபானம்.

இரண்டுமாத்திரையை வெள்ளைமிளகுதான் றிருகடியெடுத்து அதிற்கலந்துகொடுக்க சகலவிஷமுந் தீரும்.

வலிகுன்மத்திற்கனுபானம்.

ஒருமாத்திரையை வெள்ளாட்டுப்பாலில் யிழைத்துக்கொடுக்க நீர்க்கட்டு முதலியது தீரும்.

சூலைக்கனுபானம்

ஒருமாத்திரையை பசுநெய்யிலிழைத்துக்கொடுக்க சூலைவாய்வு இவைதீரும்.

நீர்பாண்டுக்கனுபானம்.

ஒருமாத்திரையை கருந்துளசிவேர் அரைத்து கழற்சிக்காயளவெடுத்து அதில் மாத்திரையிட்டுக்கொடுக்கத்தீரும்.

சன்னிக்கனுபானம்.

ஒருமாத்திரையை தூாயிலைச்சாற்றில் கொடுக்க தலைபாரமுதல் யாவுந்தீரும்.

பயித்தியத்திற்குஅனுபானம்.

ஒருமாத்திரையை ஊமத்தம்பிலைச்சாற்றில் கொடுத்துபிறகு [illegible] குளிர்ந்தஜலத்தை சிரசில் விடவும்.

கரப்பானுக்கனுபானம்.

ஒருமாத்திரையை சற்பூரவல்லிச்சாரில் கொடுக்க கரப்பான்முதலிய சிரங்குகள் தீரும்.

சுதிருண்மகத்திற்கனுபானம்.

ஒருமாத்திரையை வில்வயிலைச்சாற்றில் கொடுக்க வெள்ளைக்காளம் முதல் யாவுந்தீரும்.

இருமலுக்கு அனுபானம்.

ஒருமாத்திரையை தேனிலிழைத்துக்கொடுக்கக்ஷயிருமல்கோழையாவுந்தீரும் திரிகடுகு குடிநீரிலுங்கொடுக்கலாம்.

உஷ்ணத்திற்கனுபானம்.

ஒருமாத்திரையை சுக்குதூள் ஒருபங்கு மிளகுதூள் இருபங்குசேர்த்து அதில் மாத்திரையைபொடித்திட்டுவெந்நீரிற்கொடுக்கவும்,

—[-][*][-]—

வயிறெரிச்சலுக்கனுபானம்,

ஒருமாத்திரையை தயிரில்கொடுக்க வயிற்றில்எரிச்சல்நோய் முதலியதுந்தீரும்.

காய்ச்சலுக்கனுபானம்.

ஒருமாத்திரையை நெல்லிப்பருப்புதூளில் கலந்துகொடுக்கவும் இஞ்சிரசத்திலும் கொடுக்கலாம்

கிராணிக்கனுபானம்.

ஒருமாத்திரையை பாகயிலைசாற்றில் கொடுக்கவும் ஜலக்கிராணி முதலியதுந்தீரும்.

தலைச்சொறிக்கனுபானம்.

ஒரு-மாத்திரையை-ரு-பலம்- புங்கெண்ணெயில் குழைத்துக்காச்சி தலையில் தடவிவரத்தீரும்.

நாலாமுறைக்காச்சலுக் கனுபானம்.

மூன்றுமாத்திரைகளுக்கு திப்பிலி மிளகு மூன்றும் வெல்லமுமிட்டு அதில்பிசைந்துகொடுக்கத்தீரும்.

வயற்றுக்கடுப்பிற் கனுபானம்.

௩-மாத்திரையை வில்வப்பத்திரி, அதின்காய், மாதுளம்பிஞ்சு இவை சமன்கொண்டரைத்து அதில் மாத்திரையைப்பொடித்துவைத்துக் கொடுக்கவும்.

சீராக்கடுப்பிற்கு அனுபானம்.

ஒருமாத்திரை அதிவிடையம், அபினி-உம்-இரண்டு காசிடையெடுத்தரைத்து குளிகையை பொடித்துச்சேர்த்து வாத்துமுட்டையின் மஞ்சட்கருவில்விட்டுபொரித்துக்கொடுக்கவும் மே- அனுபானங்கள் கூறிவந்தபடி உ-௩-வேளை-கொடுப்பதுடன் அந்தந்தவியாதிபறிந்து பத்தியம் வைக்க உத்தமம்,

---

சஞ்சீவி மாத்திரை.

கெந்தகம்	விராகனிடை -	க
நாபி	,,	க
வெண்காரம்	,,	க
ரசம்	,,	க
சுக்கு	,,	க
திப்பிலி	,,	க
மிளகு	,,	க
வாளம்	,,	எ

இவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டு கையாந்தகரைச்சாற்றில் நாளொன்றுக்கு ஒருஜாமமாக (அ) நாளரைத்துமிளகளவுமாத்திரைசெய்து நிழலுலர்த்தி சீசாவில்வைத்துக்கொள்ளவும்.

அநுபானம்.

இம்மாத்திரையி லொன்றை இஞ்சிச்சாற்றி லிழைத்துதேன்விட்டு திருகடுகு, லவங்கம், தாளிசபத்திரி, சூரணத்திலிட காம், சீதகாம், ஜன்னியாவும் தீரும் முலைப்பாலிலிழைத்துதேன்விட்டுக்கொடுக்க வாதகாம்தீரும் ஓமப்பாலிக்கொடுக்க அசீரணம் மந்தம் மாந்தம் யாவுந்தீரும் மாசிப்பத்திரிசாற்றில் கொடுக்கமேகல்காம் குளிர்கடுக்கல் தீரும் இச்சாபத்தியமிருக்கவும்.

நேத்திராதிகற்பூரக்குளிகை.

கற்பூரம்	விராகனிடை -	க
நாத்தம்	,,	க
பித்தரோகணி	,,	க
கடல்நுரை	,,	க
அஞ்சனக்கல்	,,	க
படிகாரம்	,,	க
சங்கு	,,	க
நாபி	,,	க
சந்தனம்	,,	க
காவிக்கல்	,,	க
அதிமதுரம்	,,	க
தேத்தான்விதை	,,	க

இவைபனிரெண்டும் சரியிடைக்கொண்டு உலர்த்தி யிடித்துசூரணித்து வஸ்திரகாயஞ்செய்து எலிமிச்சம் பழச்சார்விட்டு (அ) ஜாமம் அரைத்து நாளங்காய்பிரமாணம் உருண்டைசெய்து நிழலுலர்த்தி சொரிக்கைத்துக் கொள்ளவும் சேத்துமம் தொண்ணூற்றுநக்கும் ஜன்னிபதிமூன்றுக்கும் நேத்திரத்தில் கலிக்கபிட கருணயாகும்.

சன்னிக்குவயித்திய கற்பூரமாத்திரை.

இரசகற்பூரம் வேண்டியமட்டில் கொண்டுவந்து குமரியிலைச்சாற்றில் மூன்றுநாள் ஊரவைத்தரைத்து சிறுபயறுபிரமாணம்

மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி சீசாவில்வைத்துக் கொண்டு வேண்டியபோது ஒருமாத்திரைதேனில் இழைத்துத்தின்னவும் இச்சாபத்தியம்.

சனுப்புமாத்திரை.

அரத்தை	விராகனிடை -	க
கடுகுரோகணி	,,	௫
சூடம்	,,	க
மதுரம்	,,	[illegible]
சுக்கு	,,	க
திப்பிலி	,,	உ
மிளகு	,,	௫
கிராம்பு	,,	௩
குங்குமப்பூ	,,	உ
கோரோசனை	,,	க

இவைகளைக்கொண்டுவந்து உலர்த்திஇடித்துச் சூரணித்து வெற்றிலைச்சாற்றுவிட்டரைத்து ஆறகன்றாப்பிரமாணம் உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில்வைத்துக்கொண்டு வேண்டியபோது உபயோகிக்கிறார், அல்லது பிரண்டைச்சாற்றில் ஒருமாத்திரை இழைத்துக் கொடுக்கவும்; இப்படி இரண்டுமூன்றுவேளை கொள்ளவும் இச்சாபத்தியம்.

கோரோசனைமாத்திரை.

மிளகு	விராகனிடை	க௦
லவங்கம்	,,	க௦
ஜாதிக்காய்	,,	க௦
சூடம்	,,	௫
ஜாபத்திரி	,,	௩
இந்திரமூலம்	,,	௫
திப்பிலி	,,	க௦

கருஞ்சீரகம்	,,	க
கோட்டம்	,,	க
கோரோஜனை	,,	உ
நாவற்றுளிர்	,,	ச
மாந்துளிர்	,,	க
வேப்பங்கொழுந்து	,,	க
பூரம்	,,	க

இவைகளை உலர்த்தி யிடித்து சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து கஉ இருவளை கொழுந்திட்டு இஞ்சி சாறும் விட்டு அரைத்து தூதுளங்காய்ப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும் ஒருமாத்திரையைத் தேன் அல்லது சர்க்கரையில்வைத்து சாப்பிட்டு மாலையில் மிள குக்கியாழங்கொள்ளவும் இச்சாபத்தியம்.

இருநாழிகைக்குளிகை.

இருவி	தாமரைக்கிழங்கு
சாரம்	எட்டிவித்து
கெந்தி	கௌரி
காபி	அக்கிரகாரம்
வெள்ளாட்டுப்பிச்ச	வெள்ளைமிளகு

இவை சமஎடையொன்று வெள்ளாட்டுப் பிச்ச நீங்கலாக மற் றவை யிடித்து வஸ்திரகாயஞ்செய்து கல்வத்திலிட்டு கஉ பிச் ச பெய்ட்டு அரைத்து கடுகு பிரமாணம் மாத்திரைசெய்யவும், அரைக்கும்போது யிளகாவிட்டால் தேன் துளிதுளியாய்விட் டரைத்து ஒருமாத்திரை வெற்றிலையிட்டுண்டு நொச்சியிலைவேது அல்லது தேங்காயோட்டை பித்தளை போகணியின்மேற் கொளுத்திவைத்து மூக்காயிட்டுவேதுபிடிக்கவும் இரண்டுநாழிகை யில் சுரம் திரும் பத்தியமில்லை.

மாந்திரைவதப்பு

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

மூன்றாவது

செந்தூரவகுப்பு.

லிங்கசெந்தூரம்.

உலர்ந்த லிங்கம் ஒருபலங்கொண்டுவந்து செப்புநெருஞ்சிப்பூகொய்து சீரியமண்குகையில் அரைத்திட்டம் ஒரு பூவை வைத்து அதன்மேல் லிங்கத்தை வைத்து அதற்கு மேலும் பூவை வைத்து மூடி மேற்கலையம் வைத்து சீலைமண்செய் துலர்த்தி பெட்டிவராட்டியிற்புடம்வைத்து ஆறியபின் எடுக்க செந்தூரமாம் சீசாவி லடக்கஞ்செய்யவும் ஜன்னி, தலைபாரம் முதலியதற்கும் தெளிவிடவும் இச்சாபத்தியம்.

பஞ்சமுக செந்தூரம்.

தாரம்	விராகனிடை	௪
லிங்கம்	,,	௧
ரசம்	,,	௧
கெந்தி	,,	௧
வீரம்	,,	௫

இவைகளைந்தும் ஒரு கிறைப்படி தூக்கி கட்டாமணக்குப்பாலிலரைத்து பிங்கோட்டுபுலர்த்தி குட்டில்வைத்து மேலே மூடி சீலைமண் இரண்டுசெய்துலர்த்தி குக்குடபுடமிட்டு ஆறினபின் எடுக்கவும், பணவிடை செந்தூரமெடுத்து திரிகடுகு பொடியிலாவது தேன். பசு வெண்ணெயிலாவது, வெண்ணெயிலாவதுகொடுக்க ஜன்னி, தலைபாரம், ஆரம்பகுட்டம், குலை, குஷ்டம், கிரந்தியப்பு, கைகால்விரணம் இவையாவுந்தீரும்.பத்

தியம் வியாதிக்குத்தக்கபடி பிச்சாபத்தியம் அல்லது கடும்பத்தியம் வைக்கவும்.

கல்துவரி செந்தூரம்.

கல்துவரியைக் கொண்டுவந்து காச்சி இமைகாடியில் மூன்று திரம்தோய்த்து புரியாமை கொண்டுவந்து அரைத்து விரல் கனமிருக்கும்படி மூடி மஞ்சளிலேயிருந்து மூடிக்கட்டி ஆட்டு எரு முட்டைசெலுத்து கஜபுடமிட்டெடுத்து கலியாணமுருக்கம்பூ சாற்றில் ஒருஜாமமரைத்து கஜபுடமிட்டு திருப்பவும் அப்படியே அரைத்து புடமிட்டு ஆறியபின் எடுத்து முலைப்பாலில் பணவிடையிட்டுக்கொடுக்க சுரந்தீரும் அல்லது தேனில் திரிகடுகுதூளிலும் கொடுக்கலாம் மகோதரம்தீரும் உத்தாமணிச் சாற்றில் பணவிடையாக வைத்துக்கொடுக்கவும் இப்படி பத்து நாள் கொடுக்க கிரிக்கோவை கிராம்பல் தீரும் இச்சாபத்தியம்.

சண்டமாருத செந்தூரம்.

பூரம்	வராகனிடை	௩
லிங்கம்	,,	௫
கெந்தகம்	,,	௧
இரச செந்தூரம்	,,	௧

இவை கிரமப்படி சுத்திசெய்து நெருக்கெடுத்து இரண்டு ஜாமமரைக்கவும் பவழநிறம்போல் செந்தூரமாகும் பணவெல்லத்தில் அரிசிபிடைவைத்து மூடி பல்லில் படாமல் விழுங்கச் செய்யவும் ஜன்னி பதின்மூன்றும் சூலைவாயு பிரவிச்சுரமும் தீரும் இச்சாபத்தியம்.

பஞ்சபாண செந்தூரம்.

லிங்கம்	பலம்	௧
மனோசிலை	,,	௧
காந்தம்	,,	௧

அரிதாரம்	,,	௧
கெந்தி	,,	௧
ரசம்	,,	௧
பூரம்	,,	௧
வெள்ளைபாஷாணம்	,,	௧

இவைகளைக் கிரமப்படி சுத்திசெய்து நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு குப்பைமேனிச்சாற்றில் நாலுஜாமமரைத்து பில்லை தட்டி நிழலில் காயவைத்து பிறகு வெற்றிலைச்சாற்றில் நாலுஜாமமரைத்து பில்லைதட்டி நிழலில் ஆறியபின்னெடுத்து பருத்திச்சாற்றில் நாலுஜாமமரைத்து பில்லை செய்து நிழலி லிட்டு உலர்த்தியெடுத்து வெள்ளருகு சாற்றில் நாலுஜாமமிப்படியே துளசிச்சாற்றில் நாலுஜாமம், வழுதலைச்சாற்றில் நாலுஜாமம் அரைத்து பில்லைதட்டி நிழலிலுலர்த்தி வாய் அகலமுள்ள சட்டியில் வெற்றிலையைப்பரப்பி அதின்மேல் இந்த பில்லையை வைத்து அதின்மேலும் வெற்றிலையைப் பரப்பிப்போட்டு மூடி சட்டியின்வாய்திட்டத்திற்கு ஓடுமூடி சீலைமண் எழுசெய்து அடுப்பேற்றி சிறுதியாகநாலுஜாமமெரித்துவந்தால் சட்டியெல்லாம் சிவந்துகாணும் அச்சமயம் தணல் நிறுத்தி அடுப்பு ஆறியபின் எடுத்துப்பார்க்கசிந்தூரமாகும் அதையெடுத்து வயிரவன்முன் வைத்துபூசைசெய்து சர்வரோகங்கட்கும்அனுபானமறிந்து பிரயோகம்செய்யவும், இஞ்சிச்சார் அல்லது தேன் அல்லது கியாழம் கற்கம்சூரணமிதுகளில் கைபாடிவரில் ஜன்னி ௧௩, சூலை ௧௮, வாதம் ௮௪, மேகம் ௨௧, கிராணி ௬, வண்டுமுதலிய விஷக்கடிகள் குஷ்ட்ட ஆரம்பம் இன்னும் கருமவியாதிகள் யாவும் தீரும் வியாதியறிந்து பத்தியம் வைப்பதே பரிகாரிக்கழகாம்.

அபிரேக செந்தூரம்.


அப்பிரேகம்	பலம்	௨
பனைவெல்லம்	,,	௨
வெடியுப்பு	,,	௨

அப்பிரேகத்தை பொடிபொடியாய் பொடித்துக்கொண்டு மற்றஇருவகையும் கூட்டி ஜெலம்விட்டாட்டி பில்லைதட்டி நிழ

உலர்த்தி ஓட்டில்வைத்துமேலோடுமூடி சீலைமண்செய்து காய வைத்து கஜபுடத்தில் வைத்து ௩-ம் நாள் எடுத்துப்பார்க்க கருக்குகள்மாரி பற்பம்போலிருக்கு மதைகெடுத்து கல்வத்திலிட்டு எருக்கம்பால் விட்டு ஒருஜாமம் அரைக்கவும் கல்வத்தோடு ரவியில் வைத்து காய்ந்தபின் மற்றுநாளும் எருக்கன்பால்விட்டு ஒருஜாமமரைத்து கல்வத்துடன் ரவியில் வைத்து மற்றுநாள் எருக்கன்பால்விட்டு ஒருஜாமம் அரைக்கவும் இப்படியே காயவைத்து காயவைத்து நாற்பதுநாள் அரைத்து நாற்பத்தியோராநாள் பில்லைதட்டிநிழலிலுலர்த்தி ஓட்டிலிட்டு வட்டில்போல மேலோடு பொருந்தமூடி ஏழுசீலைமண் செய்து குழிக்கொண்டிய கஜபுடத்திலிட்டு ஆறியபின் எடுத்துப்பார்க்க சிவந்திருக்கும் கல்வத்தில் பொடித்து பொற்றலைக்கையான் சாற்றில் நாலுஜாமமரைத்து பில்லைதட்டி காயவைத்து மறுநாளும் அச்சாற்றால்தானேயரைத்து காயவைக்கவும் இப்படியிருபத்தைந்துநாள் அரைத்தபிறகு பில்லை தட்டி ஓட்டிலிட்டு மேலோடுமூடி சீலைமண் நாலுசெய்து கஜபுடத்திலிட்டாறியபின் எடுக்க அருணனைப்போல் சிவந்து சிந்தூரமாம் சீசாவில் வைத்துக் கொள்ளவும் வியாதிக்குத் தக்க அனுபானங்களில் குன்றியளவுயிய சர்வவியாதிகளுந்தீரும் பத்தியம்கிடையாது.

செந்தூரவதப்பு

முற்றிற்று.



உ

கடவுள் துணை.

நான்காவது

பற்ப வகுப்பு.

கற்பூர சிலாசித்து பற்பம்.

கற்பூரசிலாசித்து ஒருபலங்கொண்டுவந்து வெந்தியத்தை யரைத்து விரல்கனத்திற்கு மேலே கவசம் செய்து காயவைத் தெடுத்து குக்கிட புடம்போட்டெடுக்கவும் நீராயிருக்கும் கவசம்நீக்கி சீசாவில்வைத்துக்கொள்ளவும் பசும்பாலில் அல்லது கசாயப்பால் ஆழாக்கில் தம்பிடியிடைபோட்டுக்கலக்கிக்கொடுக்கவும் கற்பசூலை மாதவிடாயாகாமை சிரங்கு இன்வு மேகவி யாதி தீரும் இச்சாபத்தியம்.

சீனகார பற்பம்.

ஒருபலம் சீனகாரத்தையெடுத்து அகத்திப்பாலுடையரைத்துகவசித்து அல்லது பசுவின்வெண்ணெய் தளமாய்கவசித்து சீலைசுற்றி (௰) எருவில் புடம்போட பற்பமாம் நெய்யில் தேனில் பாலில் குன்றியிடை போட்டு மத்தித்துகொடுக்க புண் சூடு கணமாந்தம் சொறி விரணங்கள்யாவும் தீரும் இச்சாபத்தியம்.

பொட்டிலுப்பு பற்பம்.

ஆட்டெருக்கம்பாலிற்றுப்பொடித்த துருகலையத்திற்பரப்பி அதன்மேல் ஒருபலம்பொட்டிலுப்பைவைத்து அதற்குமேலும் அந்த பொடியைப் பரப்பி சூடு மேலோடுபோட்டுப் போருந்த

மூடி சீலைமண் (௩) செய்து குக்கிடபுடம் போட்டு ஆறியபின் யெடுத்து நன்றாய்பொடித்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் தேனில் நெய்யில், இஞ்சிசாற்றில் இவைகளில் யேதிலேனும் பணவிடை மத்தித்துக் கொடுக்க அஷ்டகுன்மமும் நீர்கட்டு உஷ்ணவாய்வும் தீரும் இச்சாபத்தியம் ஷை உப்பு பற்பத்தை நீராகாரத்திலும் கொடுக்கலாம்.

கற்பூரபற்பம்.

ஒருபலம் கற்பூரத்தை கல்வத்திலிட்டு கற்பூரவல்லிச்சாறு விட்டு ஒருஜாமம் அரைத்து வில்லைதட்டி நிழலில் காயவைத்தெடுத்து லொகாவட்டலோட்டியிலிட்டு மேலோடு மூடி சீலைமண் (௩) செய்து குக்கிடப்புடம் வைத்து ஆறியபின் எடுத்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் வெத்திலையில் பணவிடை வைத்துத்தின்ன மலைஜலங்களாலும் வாய்வும் தீரும் கபம் விலகும் வாய்நாற்றம் இவை தீரும் இச்சாபத்தியம்.

திசைமுகபற்பம்.

இந்துப்பு	பலம்	௧
வெடியுப்பு	,,	௧
கல்லுப்பு	,,	௧
அப்பளகாரம்	,,	௧

இவையாவும் கோழிமுட்டைச்சாற்றால் இரண்டு ஜாமம் அரைத்து உருண்டையாக்கி மண்கலயத்திற்போட்டு மேலோடுமூடி சீலைமண் ஒன்று செய்து (௧௨) வரட்டியில் புடமிட்டு ஆறியபின்னெடுத்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் பித்தத்தால்கண்டகைகால்வெடிப்பிற்கும் குன்மம் ஜன்னி சிலவாய்வுகள் இவைக்கெல்லாம் அனுபான மறிந்துக்கொடுக்கவும் வியாதிக்குத்தக்கினபத்தியம்வைப்பது பண்டிதரியல்பென்றறியவும்.

தந்தநோய் சம்மாரி.

கல்லுப்பு	பலம்	௧
அறப்பொடி	,,	௧

கடுக்காய்	,,	௫
சுக்கு	,,	௨
காசுக்கட்டி	,,	௨
பிச்சாங்கட்டி	,,	௧
களிப்பாக்கு	,,	௧

இவைகளை வெள்ளெருக்கம்பால்விட்டு இரண்டுநாள் முழுமையும் அரைத்து பில்லைதட்டி காயவைத்து குக்குட புடமிட்டெடுத்து சீசாவில் வைத்துக்கொண்டு பல் துலக்க இரத்தம் வருதல், சீழ்வருதல், அசைதல், ஆடல், குத்தல், கடித்தல், பிருகரைதல், பிருவரர்தல் யாவும் தீரும் பல்லுகள் கெட்டிப்படும் வியாதி தீருமட்டும் சீதளவஸ்துக்களும் பழயதும் கூடாதென்றறிக.

வெள்ளைபாஷாண பற்பம்.

பிரதன்டிச்சார்	படி	முக்கால்
வெள்ளைபாஷாணம்	பலம்	ஒன்றரை

இச்சாற்றை நன்றாய் பழகிய மண் பாத்திரத்தி லூற்றி அடுப்பேற்றி பாஷாணத்தை நூல்கயிற்றால் கட்டி அச்சாற்றிற் படாமல் டோலாந்திரமாகக் கட்டி வாய்புரம் சில்லி குத்திய ஓட்டில் தாலி தழைத்து மேலேகட்டிவிட்டு அவ்வோட்டிற்கு சீலைமண் ஒன்றுசெய்து (௧) ஜாமமெரிக்கவும் பிறகு யிரக்கி ஆறியபின் கல்வத்திலிட்டு பொடித்து சீசாவில் வைத்துக்கொண்டு முறைக்காய்ச்சல் மலைக்காய்ச்சல் முதலிய சர்வசுரத்திற்கும் அநுபானமறிந்து இரண்டு அரிசியிடை கொடுக்கவும் (௧-௫) வேளையில் தீரும்.

வெண்கார பற்பம்.

அன்ட நீரில் சுத்திசெய்த வெண்காரம் பலம் (௨) சிறுக்கீரை வித்து புளியிலைச்சாறுவிட்டு ஒருஜாமம் அரைத்து பில்லைதட்டி காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடு சீலைமண் ஒன்றுசெய்து குக்குடபுடமிட பற்பமாம் குழிகிரி கெட்பு இதுகட்டாம்.

துருசுபற்பம்.

கருப்பநாசத்தில் சுத்திசெய்த துருசுபலம் (உ) யெடுத்து பொடித்திலையிலேயை அரைத்து தளமாய் கவசஞ்செய்து குக்கிடபுடமிட்டாறியபின் எடுத்துக் கல்வத்திலரைத்து சீசாவில்வைத்துக்கொள்ளவும் இத்பஸ்பத்தினால் வாதம் (அ0) சூலம் (கச) பித்தம் (௩அ) மேகம் (உக) குட்டம் (கஅ) சன்னி (கரு) குன்மம் (அ) தோஷம் (௫) சூலம் (௬) அக்கிராணி (௯) இவைகள் திரும் இவைகட்கேற்ற அனுபானங்களில் இதைக்கொடுத்து வியாதிக் கிரமத்தப்பத்தியம்வைப்பது பண்டிதர்கடமையாம்.

வீரபற்பம்.

வீரம் கால்பலம் யெடுத்து அகலில்வைத்து கீழ்மேலும் நாய்மண்டை யோட்டையிடித்து பொடித்து கீழ்மேலும் தளமாய்வைத்து நடுவீரம் நடுவிலிருக்கச்செய்து மேலேகல்மூடி சீலைமண்-ஈ-செய்து காடைபுடம்போட்டு ஆறியபின் யெடுத்து கல்வத்திலிட்டு பொடித்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் தேனில் ஒரு அரிசியிடை மத்தித்து பிரயோகித்தால் ஜன்னிரோகங்கள் யாவுந்தீரும், ஜன்னியதிகரித்து பல்கிட்டிக்கொண்டால் அகப்பைக்காம்பு அல்லது சாரண்டிகாம்பினால் பற்களைநீக்கி தேனில்மத்தித்துப்புகட்டவுந்தீரும் பத்தியமரித்துவைக்கவும்.

பூரபற்பம்.

பூரம்	பலம்	க	ஞ
படிகாரம்	,,	உ	டில்

எரி

படிகாரத்தை சட்டியிலிட்டு அடுப்பேற்றி தீபாக்கிவும். எரிக்கையில் படிகாரம் உருகிவரும் உருகின சமயம்ப பூரத்தை அதினடுவில்சொருகி எரித்துக்கொண்டிருக்க

ரம் நன்றாய்பூர்த்தபின் எடுத்து பொடித்து சீசாவில்வைத்துக் கொள்ளவும் யிளநீரில்-௨-அரிசியிடைபோட்டுகுடிக்க மார்சளி, கபம், கோழை, யிருமல் இவைதீரும் இச்சாபத்தியம்.

செந்தகபற்பம்.

பச்சமாயிருக்கும் பிய்சான்கோப்பையில்-௩௰ பலம்பனி க்கட்டியைப்போட்டு அதில்-௫ பலம் நெல்லிக்கெந்தியையிட் டு வெய்யலில்வைத்து நாலாநாளெடுத்து கெந்தியைமாத்திரம் அகலில்வைத்து மெல்லகல்அடி சத்துவாய் சிலைமண் செய்து கா டைபுடம் அல்லது இன்னொருவாட்டியும் அதிகப்படுத்திவைத் து ஆறியபின்னெடுத்து சஷ்டவர்த்திட்டரைத்து சீசாவில்வைத்து க்கொள்ளவும் தேனில் அரிசியிடைகொள்ள பெரும் வியாதிமு தல் சகலவியாதியுந்தீரும் இச்சாபத்தியமிருக்கவும்.

பற்பவகுப்பு

முற்றிற்று.

தேவி சகாயம்.

ஐந்தாவது

கட்டுவகை வகுப்பு.

தாளகக்கட்டு.

கொடிபாதாளம்பழத்தைத் துளைத்து அதிலுள் ஒருபலம் தாளகத்தைப்போட்டு சீலைமண்செய்து ௰ வரட்டியில் புடம் வைத்து ஆறினபின்னெடுத்து பாகம்பண்ணிக்கொள்ளவும்.

லிங்கக்கட்டு.

லிங்கம்பு சமூலம் அரைத்து பிரமத்தண்டு கவித்து அக்கலசத்தைப் பொடித்து சமம் சர்க்கரையை இரண்டாய்ப்பிரித்து விரைபோக்கி மேல் மருந்தைவைத்து இருபில்லையும்மூடி சீலைமண்செய்து சாணம்போட்டு அப்பிகாயவைத்து புடத்தில்வைத்து ஆறியபின்பெடுக்கவும்

பூரக்கட்டு.

ஒருபலம்பூரத்தை பிங்காணில்வைத்து காட்டத்திப்பூசாறு அடித்து வெய்யிலில் வைத்து சுண்டியபின் இன்னொருக்கிலம் ஜை பாலையடிக்கவும் இப்படி மூன்றுவிசை யடித்தெடுத்து குமட்டியில் ஒருஜாமம் வைத்துப்பெரித்து அப்பிரேகத் தகட்டில் மேல்வைத்து அடியில்தீபமேற்றி பொரிகாட்டவும் அப்படி எரிக்கையில் முசுமுசுக்கைச்சார் ஒருஜாமம்தருக்குகொடுக்கவும்.

கௌரிபாஷாணக்கட்டு.


கௌரி பலம் க, நிறுத்தெடுத்து ஒட்டிவிட்டு அடுப்பேற்றி பெய்ப்பிர்க்கனில் நாலுஜாமஞ் சுருக்குக்கொடுத்து எடுத்துக்கொள்ளவும்.

பாஷாணக்கட்டு.

கள்ளிமரத்தைத் துளைத்து அத்துளையில் பாஷாணம் ஒரு பலம்வைத்து துளைத்தெடுத்த தூளினால் தமர்அடைத்து முப்பதுநாள்சென்றபிறகு [illegible] மத்துடன் துண்டாயருத்து காட்டெருவுமூன்றில் புடமிடவும் இவ்வகைக்கட்டு பதத்துடன்செய்தவன் குருவாளியென்றும் தொழிலாளியென்றுஞ் சொல்வர்.

கட்டுவகுப்பு

முற்றிற்று.



உ

வேலுமயிலுந்துணை.

ஆறாவது

எண்ணெய்வகுப்பு.

நாக்குப்பூச்சுக்கெண்ணெ.

மிதிபாகையிலைச்சாறு	படி	வ
கழற்சியிலைச்சாறு	,,	வ
விளக்கெண்ணெ	,,	வ
சுக்கு	விராகனிடை	க
வசம்பு	,,	க
இரசகற்பூரம்	,,	க

இவை சாறும் எண்ணெயும் ஒன்றாய்க்கூட்டி அடுப்பேற்றி சுக்கு, வசம்பை சவரிடைபாயிட்டு மந்திரமாய்ச்செய்து கல்வத்திலிட்டு பூரமுங்கூட்டிப்போட்டு விளக்கெண்ணெய் விட்டரைத்து சுண்டக்காய்ச்சி பிரக்கிக்கொள்ளவும், வேளைக்கி உச்சிக்கரண்டிவீதங்கொடுக்கவும் வயிற்றிலுள்ள புழுக்கள் வெளிப்படும் இச்சாபத்தியம்.

கரப்பானெண்ணெ.

மிளகு	பலம்	க
சிறுகுறிஞ்சான்வேர்	,,	உ
நிலக்குமிழ்வேர்	,,	[illegible]
வெள்ளறுகு	,,	வ
வசம்பு	,,	[illegible]

இவையாவுங் கல்லுரலிற்போட்டு பஞ்சுபோலிடித்து அரையபடி நல்லெண்ணெயிற்கலந்து அடுப்பேற்றி காய்ச்சியெடுத்து

வைத்துக்கொண்டு அக்கிசத்தி விராகனெடை யெண்ணெய் உள்ளுக்குக்கொடுத்து மேலுக்கும் பூசவும்.

சர்வகரப்பானெண்ணை.

சிறுகுறிஞ்சான்	பலம்	௧
வனடக்லி	,,	௧
ஆகாசகெருடன்கிழங்கு	,,	௧
உள்ளி	,,	௧
அல்லித்தாமரை	,,	௧
பினாகருவா	,,	௧
சங்கிக்கொடி	,,	௧
நிலவிளா	,,	௧
வசம்பு	,,	௧

இவைகள்யாவும் கசவுரலிலிட்டு பஞ்சபோல் தூக்கி-டு-பலம் விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி மெழுகுபதத்தில் காச்சிவடித்து காலையில் காலுமுறி இடை ங-டு- நாள் கொள்ள சகலகரப்பானுந் தீரும்.

தமிராண்ணை.

கல்லெண்ணெய்	படி	௨
எருமைத்தயிர்	,,	௨
இந்துப்பு	களிவிடை	௰
சுக்கு	,,	௰
சித்திரமூலம்	,,	௰

கடைசிலுறாகள் மூன்றும் பிடித்து வஸ்திரகாயம் செய்து தயிரெண்ணெயாவும் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி கமலாக்கினியாக இரண்டுநாமம் பெரித்திரக்கிவைத்துக்கொண்டு காலையில் உள்ளங்கையளவுசாப்பிடவும் இரா கெழுச்சல் தீரும் பத்தியம் மெழுமோர்கட்டி புளிக்கவும் காம்கூடாது.

மேகத்திற்குத்திரித்தியெண்ணை.

பொன்னாங்கண்ணிச்சார்	படி	அரைக்கால்
பொடுதலைச்சார்	,,	,,
பிரமியிலைச்சார்	,,	,,
சம்பிராணியிலைச்சார்	,,	,,
கொட்டைக்கரந்தைச்சார்	,,	,,
வெள்ளறுகுசார்	,,	,,
நாயுருவிச்சார்	,,	,,
வல்லாரியிலைச்சார்	,,	,,
மணித்தக்காளியிலைச்சார்	,,	,,
முசுமுசுக்கைச்சார்	,,	,,
விளக்கெண்ணை	,,	கல
கடுரோகணி	பலம்	க
ஜாதிக்காய்	,,	க
காட்டுபுகையிலைவேர்	,,	க

கடைசரக்கு மூன்றுவகையும் இடித்து தூளித்து யெண்ணை சார்யாவும் ஒன்றாய்க்கூட்டிகலந்து அடுப்பேற்றி மெழுகுபதமாய்க்காய்ச்சி யிறக்கி காலையில் கழஞ்சுவீதம் (எ) நாளுண்ணவே மேகந்தீரும் இச்சாபத்தியம்.

அண்டவாதயெண்ணை.

விளக்கெண்ணை	படி	வ
பொற்றலைகையான்சார்	,,	வ
வெங்காயச்சார்	,,	வ
ம - கடுக்காயின்தோல்		

கடுக்காய்த்தோலையிடித்து வஸ்திரகாயஞ்செய்து மற்றயவை ம்மூன்றுங்கூட்டி கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாய் காய்ச்சி (எ-க) நாள் கழஞ்சுவீதம் குடித்துவர அண்டவாதமொழியும்.

மேகத்தெண்ணை.

கருஞ்சீரகம்	விராகனிடை	எ
பரங்கிச்செக்கை	,,	க

கழற்சிப்பருப்பு	,,	க
சீரகம்	,,	க
சோகவசி	,,	க
பூரம்	,,	க

இவைகளையெல்லாம் வகைவீதம் சேர்த்து (படி) வெள்ளைக்கெண்ணெயில் கலந்து அடுப்பேற்றி மெழுகுபதமாய் காய்ச்சி யிரக்கி காண்டிவிதம்(ஏ) நாள்கொள்ள வெள்ளை யாவும் தீரும்.

செங்காயெண்ணெ.

முந்திய செங்கலை கூடயிலேத்து ஒருகவளத்திரத்து தினை சோதித்து அதற்கு பதில் சரக்குகளிப்பாலில் கரைத்து கார்க்கடைந்து (உ) நாள் மண்ணிப்புதைத்தெடுக்க பூரணம் ம)செய்து கல்லத்திப்பட்டரைத்து நல்லெண்ணெ (உ படியில்கலந்து அடுப்பேற்றி மெழுகுபதமாய் காய்ச்சியிரக்கி காண்டிவிதம்(ஏ)நாள்கொள்ள வாய்வு குத்தல் குடைச்சல் யாவும் தீரும் இச்சாபத்தியம்

சேத்துமத்திற்கெண்ணெ.

கையாந்தகரைச்சார்	படி	வ
நல்லெண்ணெ	,,	வ
ம கடுக்காய்த்தோலின்சார்		

இவையாவும் ஒன்றாயூற்றிக்கலந்து மெழுகுபதமாய் காய்ச்சியிரக்கி காண்டிவிதம்(ம நி) நாள்கொள்ள சேத்தும வியாதி யாவும் தீரும் இச்சாபத்தியம்.

உஷ்ணத்திற்கெண்ணெ.

நாராண்டின்வேப்பம்பட்டை	பலம்	க
எருக்கன்வேர்	,,	க
கொச்சிவேர்	,,	க
முருங்கைவேர்	,,	க

கருநொச்சிவேர்	,,	க
கொடிவேலிவேர்	,,	க
ஆடாதொடைவேர்	,,	க

இவையாவும் கல்லுரலிற்போட்டு பஞ்சுபோல்நருக்கி பானையிலபோட்டு (ச) படி ஜெலம்விட்டு (அ) க்கொரு பங்காய் கியாழமிட் டிரக்கி அந்த கியாழமிடைக்கி சித்தாமணக்கெண்ணைகூட்டி ஆவின்நெய் உ-பலங்கூட்டி கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாய்காச்சி காலையிற் காண்டிவீதம்-எ நாட்குடிக்க கருமேகந்திரும், தாய்க்கும் பிள்ளைக்குங்கொடுக்கவும் கருக்கிரந்தி யாவுந்திரும்.

மேகசூலைக்கெண்ணை.

சுருள்பட்டை	பலம்	க
லவுங்கம்	,,	க
லவுங்கப்பட்டை	,,	க
கஞ்சா	,,	க
சோம்பு	,,	க
சிறுநாகப்பு	,,	க
கருஞ்சீரகம்	,,	௲
வெள்ளைப்பூண்டு	,,	௲
மிளகு	,,	௲
காட்டுசீரகம்	,,	௲
சங்கன்வேர்	,,	க
சுங்கங்குப்பி	,,	க
சத்திச்சாரணைக்கிழங்கு	,,	க
பரங்கிச்செக்கை	,,	க
செங்கத்தாரிப்பட்டை	,,	க
வசம்பு	,,	க

இவையாவுமிடித்து சூரணித்துவஸ்திரகாயஞ்செய்து விளக்கெண்ணெய் ஒருபடியில்விட்டு கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாய் காச்சியிரக்கையில் பூரம் கால்பலம்

பொடித்துப் போட்டு கலந்திரக்கி (௫-எ-நாள்கொள்ள மே கருலே; வாய்வு, யாவுந்தீரும் சுட்டபுளி வருத்தஉப்பு கூட் டவும்

குன்மத்திற்கெண்ணை.

பேய்க்கொம்மட்டிக்காய்சாறு, சித்ராமணக்கெண்ணை சமனிடைசேர்த்து சுக்கு திப்பிலி மிளகு இந்துப்பு வகைக் கு ஒருவிராகனிடைபொடித்துப் போட்டுக்கலந்து அடுப் பேற்றி மெழுகுபதமாயக் காய்ச்சி யிறக்கி காலையில் காலணா யிடை சாப்பிட குன்மம் சத்திகுன்மம் இவைதீரும் (௫-எ ௬ நாள் கொள்ளவும்.

சித்ராத்திரியெண்ணெய்

காயம்	பலம்	௧
உள்ளி	,,	௧
கடுக்காய்	,,	௧
வாளம்	,,	௧
காட்டெருமைப்பால்	,,	௧
வெண்காரம்	,,	௧
இந்துப்பு	,,	௧
சீரகம்	,,	௧
வேலிப்பருத்திப்பால்	,,	௧
பூரம்	,,	௧
கஸ்தூரி	,,	௧
விளக்கெண்ணை	வீசை	௧
தேங்காய்ப்பால்	,,	௨

மேற்படி சரக்குகள்யாவும் பிடித்து வஸ்திரகாயம்செய்து கல்வத்திலிட்டு தேங்காய்ப்பால்விட்டரைத்து எண்ணெயி லிட்டுகலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாய்க்காய்ச்சி யிறக் கையில் கஸ்தூரியை துளி எண்ணெய்விட்டு அரைத்துக்கல ந்து யிறக்கவும் (௪) களஞ்சியிடைகாலையிலயிதம் சாப்பிட வும் இப்படி (௫-எ-௬) நாள் கொள்ள மேகாதிசவிரோகந்

கள் குலைஉத்தணவாய்வு கண்ணெரிச்சல் கிராந்தி பெரும்பாடு ஆமலக்கட்டி சீர்கட்டி இவைதீரும் இச்சாபத்தியம்.

கலிங்காதியெண்ணெய்

துமட்டிக்காய்சாறு	படி	க
பசுங்கோமயம்	,,	க
வெள்ளாட்டுக்கோமயம்	,,	க
கடுக்காய்	பலம்	உ
கடுகுரோகணி	,,	உ
ஏலம்	,,	உ
வாய்விளங்கு	,,	உ
சுக்கு	,,	உ
திப்பிலி	,,	உ
மிளகு	,,	உ
மிளகுரணைக்கிழங்கு	,,	உ
பூண்டு	,,	உ
வாளம்	,,	உ
விளையுப்பு	,,	உ
இந்துப்பு	,,	உ
சவுட்டுப்பு	,,	உ
அப்பளாகாரம்	,,	உ
சாரம்	,,	உ
வெடிச்சாரம்	,,	உ
கண்டங்கத்திரிவேர்	,,	க
சத்திச்சாரணைவேர்	,,	க
வேளைவேர்	,,	க
மஞ்சள்சார்	,,	க
இஞ்சிச்சார்	,,	ஞ
குமரிச்சார்	,,	௩
நொச்சிச்சார்	,,	,,

இம்மருந்திற்கூறிய கோமியங்களையும் சாறுவகையும் ஒன்றுபூக்கி சரக்குகளையாவும் இடித்து வஸ்திரகாயம் செ

ய்து வெண்ணெயை யடுப்பேற்றி சார்முதலிய சூரணம்யாவும் வொன்றுநூத்திக்கலக்கி காச்சி மெழுகுபதத்தில் யிறக்கி நிதம் காலையில் ௨ பலம் வீதமாக (௩-௭-௯) நாள் தாப்பிட குன்மம் பக்கசூலை, பெருவயர், வாதம், வாய்வு, மகோதாம், நீர்க்கட்டி கவுச்சக்கட்டி மேகம் (௨௧) கட்டுவாதம் இவையாவும் தீரும் இச்சாபத்தியம்

பெண்ணெய்வகுப்பு

முற்றிற்று.

கடவுள் துணை.

ஏழாவது

தயிலவகுப்பு.

மாந்தத்தயிலம்.

அருகம்புல்	பலம்-க
உசிலம்பட்டை	,, க
மஞ்சள்	,, க
மியக்கொழுந்து	,, க
வெள்ளுள்ளி	,, க
ஆத்துதும்மட்டிக்காய் உ	

இவைகளையிடித்து சித்தாமணக்கெண்ணெ அறைபடியில்கலந்து அடுப்பேற்றி காய்ச்சிவடித்து உச்சிக்கரண்டிவீதம் காலைவேளையில் (க-ரு-எ) நாள்கொடுக்க மாந்தம் பெருமல் யாவுந்தீரும்

மண்டைகரப்பானுக்குத் தயிலம்

அவுரிவேர்பட்டை	பலம்-க
வெள்ளுள்ளி	,, க
வசம்பு	,, க
சுருள்பட்டை	,, க
வலம்புரிக்காய்	,, க

இவைகளையிடித்து பொடித்து வஸ்திரகாயம்செய்து நல்லெண்ணெவிட்டரைத்து-ய-பலம் நல்லெண்ணெயிற்கலந்து

(௧) நாள்சூரியபுடம் வைத்தெடுத்து தடவிவர மண்டைக் கரப்பான் முதலிய சிரங்குகளும் ஆறிவிடும்.

புழுவெட்டிற்கு தயிலம்

ஏலம்பலம் (௧) பழச்சாற்றிலரைத்து (௪) படி நல்லெண்ணெயில் கலந்து (௭) நாள் சூரியபுடம் வைத்தெடுத்து தினந்தோறும் (௩) தலைமுழுக புழுவெட்டு கபாலகுட்டம் கூடியாவுந்தணியும்.

தலைப்புழுவெட்டிற்கு தயிலம்.

சாரட்டைச்சார் வெற்றிலைச்சார் நல்லெண்ணெய் மிளகு பலம் (வ) மிளகையும் (௧௨) மூட்டுப்பூச்சியும் பெண்ணெய் விட்டரைத்து யாவும் ஒன்றாய்கலந்து சூரியபுடம் (௧௫) நாள்வைத்தெடுத்து தேய்த்துவர சவுக்கியமாகும்.

மயில்மாணிக்கத்தயிலம்.

சந்தனத்தூள்	பலம்	அரை
வெண்மிளகு	,,	அரை
மரமஞ்சள்	,,	அரை
நிலப்பனங்கிழங்கு	,,	அரை
வெட்டிவேர்	,,	அரை
குருவேர்	,,	அரை
மயிர்மாணிக்கச்சார்	படி	௳
கிறுகீரைச்சார்	,,	௳
கையாந்தகரைச்சார்	,,	௳
பொன்னாங்கண்ணிச்சார்	,,	௳
முசுமுசுக்கைச்சார்	,,	௳
நல்லெண்ணெய்	,,	௳

முன்கூறிய சரக்குகள்யாவும் இடித்துப்பொடித்து வஸ்திரகாயம்செய்து சார்வகையாவும் ஷை எண்ணெயில்ப்பிரயோகி

த்து அப்பிப்பற்றி மெழுகுபதமாய்காச்சி சன்னவட்டமா கதலைமுழுகிவர மயிர்திருவந்தி கருத்தும் ஆலம்விழுது போல் கூந்தலவளரும் தேகம்வெகு குளிர்ச்சியாயிருக்கும் திடகாத்திரமுண்டாகும்

இராமபாணத்தைலம்

கோரைக்கிழங்கு	விராகனிடை	-௨ ஐ
பூண்டிசெடியின்வேர்	,,	௨,,
சந்தனத்தூள்	,,	௨,,
அதிமதுரம்	,,	௨,,
விலாமிச்சம்வேர்	,,	௨,,
வெட்டிவேர்	,,	௨,,

இவையாவும் யிடித்து சூரணித்து நல்லெண்ணைபடி(௧) பசும்பால்படி-அறை இவ்விரண்டும் ஒன்றாய்கலந்து சூரணத்தைக்கொட்டி அப்பிப்பற்றி மெழுகுபதமாய்காச்சி தலைமுழுகிவர சர்வவாதமும்போம்

ஜன்னித்தைலம்.

வசம்பு	விராகனிடை	௨ ஐ
கடுகு	,,	௨ ஐ
உள்ளி	,,	௨ ஐ
காயம்	,,	௨ ஐ
சர்ப்பக்கண்டம்	,,	௨ ஐ
பூநகம்	பலம்	௮
வேப்பெண்ணை	படி	ஐ
நல்லெண்ணை	படி	,,

இஷ மருந்துகள் யிடித்து பொடித்துப்போட்டு யாவும்ஒன் றாய்கலந்து மெழுகுபதமாய்காச்சி யிரக்கையில் கஸ்தூரி வ-விராகனிடைபோட்டு கலந்திறக்கிக்கொண்டு அருமைதயத்திற்குமுன் தலைக்குதேய்த்து முழுகி குப்புசாதம் சாப்பி

டவும் கண்ணில்படக்கூடாது பகலில் நித்திரைகூடாது இப்படி-௩-௫-தலைமுழுக ஜன்னிதலையில் விடாநோய் பூரங்க மூத்திசுவுயாவும்தீரும்

கொம்பரக்குத்தயிலம்.

சித்தாமுட்டிவேர்	பலம்	௫
அமுக்கிராவேர்	பலம்	௫
சுக்கு	விராகனிடை-	௨
திப்பிலி	,,	௨,,
மிளகு	,,	௨,,
கடுக்காய்	,,	௨,,
நெல்லிக்காய்	,,	௨,,
தான்றிக்காய்	,,	௨,,
மஞ்சள்	,,	௨,,
மரமஞ்சள்	,,	௨,,
கஸ்தூரிமஞ்சள்	,,	௨,,
வெட்டிவேர்	,,	௨,,
தேவதாரம்	,,	௨,,
விலாமிச்சம்வேர்	,,	௨,,
சிரணைவேர்	,,	௨,,
லவுங்கப்பட்டை	,,	௨,,
ஏலம்	,,	௨,,
இந்துப்பு	,,	௨,,
அதிமதுரம்	,,	௨,,
ஜாதிக்காய்	,,	௨,,
நல்லெண்ணை	படி	க
பசுமோர்	படி	க

கடைசரக்குகள் யாவும்பிடித்து வஸ்திரகாயம்செய்துமோரும்யெண்ணையும் ஒன்றாய்க்கலந்து அதிற்போட்டு அடுப்பேற்றி மெழுகுபதமாய்க்காய்ச்சி வடித்து (௪) நாள் வட்டமாகத் தலைமுழுகிவரில் சைநாவெரிவு மேகச்சூடு காங்கை யாவுந்தணியும் தேகம்புஷ்டியாம்ஜன்னி சயித்தியம்தீரும்.

ஜெயவயிரவத்தைலம்.

(-*-)

தாளகம்	வராகனெடை	௫
கெந்தி	,,	௫
மனோசிலை	,,	௫


இம்மூன்றும் கருவத்திலிட்டு காடிவார்த்தரைத்து மெல்லிய சீலையில் பூசிக்காயவைக்கவும் காய்ந்தபிறகெடுத்து திரும்பவும்பூசிவத்திபோல்திரித்துகாயவைத்தெடுத்துஒருமுளைவிளக்கில்கொளுத்தியெரியும்போது தலைகீழாய்பிடிக்க சுடர்தயிலமிறங்கும் அந்தத்தயிலத்தை சீசாவில்பிடித்து வைத்துக்கொண்டு வெத்திலையில்-க-உ-௩-துளிவரையில் விட்டுமடித்து தின்னதலைநடுக்கல்தேகம் நடுக்கல் கை கால்நடுக்கல் இவைதிரும் கனாதிறமாரும் இச்சாபத்தியம்.

வில்வாதித்தைலம்.

சந்தனத்தூள்	பலம்	௨
சுக்கு	,,	க
திப்பிலி	,,	க
மிளகு	,,	க
கஸ்தூரிமஞ்சள்	,,	க
கோரைக்கிழங்கு	,,	க
ஏலத்தூள்	,,	க

(௰) பலம்வில்வவேர்பட்டையை கொண்டுவந்து பஞ்சுபோலடித்துயெட்டுபடி ஜலத்திலிட்டு ஒருபடியாகக் காச்சிய கியாழத்தைவடிக்கட்டியெடுத்து அத்துடன் நல்லெண்ணைபடி(க) இரண்டும்ஒன்றாய்பூத்திகலந்து அடுப்பேற்றி யெரிக்கையில் ஷை சரக்குகளைபிடித்து வஸ்திரகாயமசெய்து காய்கிறயெண்ணையிலேபோட்டுக்கலந்து மெழுகுபதமாய் காச்சி பிரக்கிகாலையில் - ௨-நாள்கட்ட


மாகந் தலைமுழுகிவரில் கண்புகைச்சல்மேகயெருமல் ரத்தமூலம்வ ரட்சி மேகம்வாதம் பித்தம் இத்தகைவியாதி யாவும்தீரும்.



சந்தனாதி தைலம்.

நல்லெண்ணெய்	படி	௧	மூத்தக்காசு	,,	௨
ஊற்றுஜெலம்	,,	௧	தாமரைப்பூ	,,	௨
பசும்பால்	,,	௧	கஸ்தூரிவேர்	,,	௨
நெல்லிவிரை	பலம்	௨	லவங்கப்பத்திரி	,,	௨
சந்தனத்தூள்	,,	௨	தேவதாரம்	,,	௨
ஏலம்	,,	௨	அதிமதுரம்	,,	௨
வெட்டிவேர்	,,	௨	தனியா	,,	[illegible]

முன்னுரைத்தயெண்ணெய் மோர்ஜெலம் இம்மூன்றும் ஒன்றுப டவைத்திக்கலந்து அடுப்பேற்றி யெரக்கவும்பின்கூறிய மருந்துகள் யாவும்பிடித்து வஸ்திரகாயம்செய்து ஷை பாண்டத்தில் போட்டு கலக்கி மெழுகுபதமாய்காச்சி வடித்து தலைமுழுகிவரில் பித்தசா லேகரம் மூலம்மேகவியாதிகள் யாவும் தீரும்.



நெய்சிட்டித்தைலம்.

பசும்நெய்	படி	௩
நல்லெண்ணெய்	,,	௩
நெய்சிட்டிசார்	,,	௩
வெட்டிவேர்	பலம்	௨
நெய்தல்கிழங்கு	,,	௨
அதிமதுரம்	,,	௨
சந்தனம்	விராகனிடை	௨
கஸ்தூரி	,,	௨
பச்சிலை	,,	௨

கிச்சிலிக் கிழங்கு	,,	௨
மிளகு	,,	௩
சீரகம்	,,	௨

இவையாவும்மிடித்து வஸ்திரகாயஞ்செய்துநெய் யெண்ணெசார்யாவும்ஒன்றுயூற்றி கலந்து அடுப்பேற்றி விளம்பதமாய்காச்சியிரக்கிதலைமுழ்கிவரில் கண்புகைஉஷ்ணம் காந்தல்குடுவெள்ளைமேகம் தீரும்.

பற்பவகுப்பு



உ

தேவிசகாயம்.

எட்டாவது

லேகியவகுப்பு.

சோகைகாமாலைக்கு லேகியம்.

சுக்கு	விராகனிடை	௧	கடுக்கா	விராகனிடை	௧
திப்பிலி	,,	௧	சிறுதேக்கு	,,	௧
மிளகு	,,	௧	அரத்தை	,,	௧
சாதிக்காய்	,,	௧	ரோகணி	,,	௧
ஓமம்	,,	௧	காட்டுசீரகம்	,,	௧
சீரகம்	,,	௧	சோம்பு	,,	௧
கிராம்பு	,,	௧	கழற்சிப்பருப்பு	,,	௧
இஞ்சி	,,	௧			

இவைகளையிடித்து சூரணித்து வஸ்திரகாயம் செய்து அவ்வி டைக்குச்சரியாய் வெள்ளாட்டுப்புழுக்கையைசூரணித்துசேர்த்து

கையான்சார்	படி	௧
பசும்நெய்	,,	௨
பனங்கற்கண்டு	பலம்	௭

நெய்யுஞ்சாறும் ஒன்றாயூற்றி அடுப்பேற்றிசற்றுநேரங்காய்ந்தபி றகுசூரணத்தை கொஞ்சங்கொஞ்சமாய் தூவிக்கொண்டேகிளரிவ ரவும்யாவும் தீர்ந்தபிறகு பனங்கற்கண்டை தூவிக்கிளரவும் லேகி யம்முதிராதபக்குவமாய் கிளரி யிறக்கிவைத்துக் கொண்டு நெல்லிக்கா ய்விதம் காலைதருவேளையாக ௨௰-௩௰-நாள்கொள்ளநீர்கோர்வைகு ன்மம்சோகை காமாலை நெஞ்செரிவுஅக்கினிமந்தம் இவையாவும் தீரும்.

முயல் லேகியம்.

அரத்தை	பலம்	௨	தூதுவேளை	பலம்	௧
பரங்கிச்செக்கை	,,	௨	கண்டங்கத்திரி	,,	௨

தாளீசப்பத்திரி	„ க	மிளகு	„	கஉ
லவங்கப்பத்திரி	„ உ	பழுப்புச்சற்கரை	„	யரு

சற்கரை தவிர மற்றதை யிடித்து சூரணித்து வைத்துக் கொண்டு முயல்கறி ய-பலங்கொண்டுவந்து ஜெலம்விட்டு இரண்டு வேளை கழுவி பாணைசட்டியிலிட்டு நீர்சுண்டமட்டும்பிரட்டி -ய-பலம் நெய்யை யதிலேபெற்றி ஷை கறியையுஞ்சூரணத்தையுங் கொட்டிகிளரி சிவந்தபதமானவுடன் ங-பலந்தேன்விட்டு ரேகித்து இரக்கிவைத்துக்கொண்டு புன்னைக்காய்ப்ரீதம்ய-உய-ஙய-நாள் வட்டமாகத்தின்றுவரவும் பொடி, புகை, போகம், வாகிரிவெத்திலைப்பாக்கு இவையாகாது க்ஷயம், யிளைப்பிருமல், காசம், இதுகள்தீரும்.

தேத்தான்கொட்டைலேகியம்.

தேத்தான்கொட்டைபலம்	- ங	ஏலம்	பலம் -	உ
கருஞ்சீரகம்	„ உ	சீரகம்	„	உ
திப்பிலி	„ உ	விரைநீக்கியகடுக்காய்	„	க
மிளகு	„ உ	ஜாதிக்காய்	விராகனிடை -	க
சுக்கு	„ உ	லவங்கம்	„	க

இவைகளை தனித்தனியாய் நெய்யில்வறுத்துப்பொடித்துதேன்பலம் (யரு) அதிற்பெய்து சூரணத்தைகொட்டிகிளரி அதனையில்(ய) பலம்சக்கரைபோட்டுக் கிண்டி பாகுபதமாயிரக்கிவைத்துக்கொண்டு கெச்சக்காய்ப்ரீதம் இருவேளையும் தின்றுவரவும் வெள்ளைமேகம்தீரும் தாதுபுஷ்டியாம்,

---


வச்சிரகண்டி லேகியம்.

மதனகாமப்பூ	பலம் - க	அதிவிடையம்	பலம் -	க
கிராம்பு	„ க	அபினி	„	க
ஏலம்	„ க	சுக்கு	„	க
காட்டாத்திப்பூ	„ க	சப்சாவிரை	„	க
கசகசா	„ க	ஜாதிக்காய்	„	க
வாலுழுவை	„ க			

இவைகளையிடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு (ம)பலம்பனைவெல்லம பாகுபிடித்து அந்தப்பாகில்சூரணத்தை தூவிக்கிளறி மெழுகுபதத்தில் யிறக்கிவைத்துக்கொண்டு அந்திசந்திஇருவேளையும் கொட்டைப்பாக்களவு தின்றுவரசுர ஆனல் மந்தக்காச்சல் குழந்தைகள்சோகை மாந்தம்அதிசாரபேதி இரத்தபேதிகிராணி இவைதீரும் போகத்தில்இன்பங்கொடுக்கும் இந்திரியங்கட்டும்.

மூலத்திற்குலேகியம்.

தாயுருவியிலை ஒருகுத்துபறித்துவந்து அத்துடன் ஒருபிடிபூங்கலரிஇலைத் தரைத்துகொஞ்சம்ஜெலம்விட்டு கரைத்துஅடுப்பேற்றியெரிக்கவும் அப்படியெரிக்கையில் நாட்டுச்சக்கரை (ரு) பலம்போட்டு பசும்நெய் மூணுபலம்விட்டு கிளறிபாகுபதமாயிரக்கிவைத்துககொண்டு இருவேளையும்புன்னக்காய் விதம்சாப்பிட்டுவரவும் மூலவேதனைதீரும் இச்சாபத்தியம்.



மகாபூரணலேகியம்.

அதிமதூரம்	பலம் -	இ	சடாமாஞ்சி	,,	ஒ
சோம்பு	,,	ஒ	கசகசா	,,	கஒ
கோஷ்டம்	,,	ஒ	விலாமிச்சன்வேர்	,,	ஒ
சுக்கு	,,	ஒ	நன்னாரிவேர்	,,	ஒ
ஆனைத்திப்பிலி	,,	ஒ	வெட்டிவேர்	,,	ஒ
வால்மிளகு	,,	ஒ	நீர்முள்ளிவிரை	,,	க
சீரகம்	,,	க	அத்திவிரை	,,	க
கடுக்காய்	,,	க	ஆலம்விழுது	,,	க
தனியா	,,	க	அரசன்விரை	,,	க
தாளிசபத்திரி	,,	ஒ	பூனைக்காலிவிரை	,,	க
ஜாபத்திரி	,,	ஒ	வெள்ளரிவிரை	,,	க
ஜாதிக்காய்	,,	க	சப்சாவிரை	,,	க
லவுங்கம்	,,	ஒ	தாலம்கானு	,,	க
லவுங்கப்பட்டை	,,	ஒ	சபேத்துருசலி	,,	க
சன்னராஷ்டம்	,,	ஒ	வாதுமைப்பருப்பு	,,	உ
பெருலவுங்கப்பட்டை	,,	ஒ	சாரப்பருப்பு	,,	உ
நிலப்பனங்கிழங்கு	,,	க	முந்திரிப்பருப்பு	,,	உ


பருப்புதினுசுகள் தவிர மற்றயாவும்வெய்யலில் உலர்த்திப்பிடித்துவஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு (௨௯) பலம்கெஞ்சா கொண்டுவந்து மெல்லிய சீலையில் முடித்த இரண்டுபடி பாலில் போட்டு காச்சிபுரைக்குத்திமறுநாள்காலையில்கடைந்துவெண்ணெயெடுத்து அந்தவெண்ணெயை அச்சட்டியிலிட்டு உருக்கி அதில்ஷை சூரணத்தை கொஞ்சங்கொஞ்சமாய் தூவிக்கிளரிவரவும்அப்படிகிளரயில் கற்கண்டு (௰) பலம்போட்டுகிளரவும் பிரகுதிராட்சிபழம்பலம் (௫) போடவும்அதன்பிரகு ஷை பருப்புவகைகளைபோட்டு சேர்க்கயில்தேன் போதுமான வரைக்கும் கொஞ்சங்கொஞ்சமாய்விட்டு கிண்டிபாகு பதமாயும்லேகியம் முதிராமலும் தகுமானபதத்தில் வந்தவுடன்இரக்கி பிங்கான்கோப்பையில் வைத்துக்கொண்டு (௨௰) அல்லதுஇருமண்டலம் அந்திசந்தி தின்றுவரவும் மேகத்தாற்சார்ந்த வியாதிகளையுங்கண்டிக்கும் புணர்ச்சியில் வெகுவலிவுகொடுக்கும் லேகியங்கட்டிவிடாது ஆனால் லேகியத்தின்னும்போதுபுணரப்படாது கள்சாராயமுதலான வேறுலாகிரியருந்தக்கூடாது.

போசனசஞ்சீவிலேகியம்.

இந்துப்பு பலம்	௪	பொரித்தபொரிகாரம்	௧
பொட்டிலுப்பு	௧	பொரித்தவெண்காரம்	௧
கல்லுப்பு	௧	சுக்கு	௧
வளையலுப்பு	௧	திப்பிலி	௧
கரியுப்பு	௧	மிளகு	௧
சோத்துப்பு	௪	ஓமம்	௧
கிராம்பு	௧	திப்பிலிமூலம்	௧
சோம்பு	௧	கோஷ்டம்	௧
லவுங்கப்பு	௧	காயம்	௧
செண்பகப்பு	௧	உழமண்	௧
சிறுநாகப்பு	௧	புட்டிவெல்லம்	௰
கடுக்காய்ப்பு	௧	வெள்ளுள்ளி	௫

வெல்லமும் உள்ளியும் தவிர மற்றவையிடித்து சூரணித்து வைத்துக்கொண்டு வெல்லம் நீர்க்கப்பாகுசெய்து உள்ளியைப்போட்டுரேசித்து இந்த சூரணத்தைசிறுகத்தூவிக்கிண்டி பாகுபதமும் லேகியபக்குவமுமாகக் கிளறவும் பாகுபோதாவிட்டால்தேன் சிறுகவிட்டுக்கிண்டி யிறக்கிக்கொள்ளவும்-உ௰-நாள் சுண்டக்காய்வீதம் கொள்ள சோகைவயற்றிற்கட்டி மூலம்-குன்மம - மூலக்கிராணியிவையாவும் தீரும் அஜீர்ணமந்தம்-வாய்வு சூதகவாய்வுகளும் தீரும் இச்சாபத்தியம்.

லேகிய வகுப்பு.



வேலுமயிலுந்துணை.

ஒன்பதாவது

சூரணவகுப்பு.

நித்திரையற்றவாய்விற்கு

சூரணம்.

ஏலம்	விராகனிடை	க
செஞ்சந்தனம்	,,	க
சந்தனத்தூள்	,,	க
தேத்தான்கொட்டை	,,	க

இவைகளின் சூரணம் சமயிடைக்கு சற்கரை சம்பிடைகூட்டி பூசணிக்காய் சார்ஆழாக்குப்பிழிந்தெடுத்து மேற்படி சூரணமும் அவிருகனிடை கூட்டிக்கலக்கி சாப்பிடவும் ௩-ந-எ-௯-நாள் கொள்ள பித்தவாய்வு நீரோதினவாய்வு யாவும்தீரும் நித்திரை பிடிக்கும்.

பித்தமயக்கத்திற்கு சூரணம்

சிரகம்	பலம்	அ
நெல்லி	,,	க
முள்ளி	,,	க
சுக்கு	,,	க

இவைகள் வகைக்கு சமன் கொண்டித்துசூரணித்து அவ்விடைக்கு சமன் சற்கரைகூட்டி வேளைக்கு காலணாயிடையாக யெடுத்து தேன்விட்டு மத்தித்து சாப்பிடவும் இப்படி இருவேளையும் 10 தினமுண்ண பித்தமயக்கம்-தீரும்-இச்சாபத்தியம்.

ஐபேதிச்சூரணம்

சுக்கு	பலம்	அரை
திப்பிலி	,,	,,
மிளகு	,,	,,
கடுக்காய்	,,	,,
தான்றிக்காய்	,,	,,
நெல்லிக்காய்	,,	,,
லவுங்கம்	,,	,,
சிறுநாகப்பு	,,	,,

இவைகளை யிடித்துப் பொடித்து சூரணித்து சமநிடை சற்கரைக்கூட்டி மூனேமுக்கால் விராகிடையெடுத்து தேனில்குழைத்துகாலையில் சாப்பிடவும் உ-ந-விசை பேதியாகும் பித்த வாய்வு தீரும் உ-ந-நாட் கொள்ளவும்.

நிலாவிரைச்சூரணம்,

நிலாவிரை	பலம்	௪
ஏலம்	,,	க
கடுக்காய்பூ	,,	க
சுக்கு	,,	க
திப்பிலி	,,	க
மிளகு	,,	க
நெல்லிப்பருப்பு	,,	க

இவைகளையிடித்து சூரணம்செய்து திருகடிபிரமாணம் வென்னீரிற்போட்டு சாப்பிடவும் ந-௪-விசைபேதியாகும் வாய்வுகலையும் வாதபித்தநீர்கள் சமரசப்படும்,

சுகபேதிசூரணம்,

பசும்பாலில் வேகவைத்தெடுத்த சிவதைவேர் பலம் ரெண்டரை இதையிடித்து சூரணித்து சக்கரை ரெண்டரைபலம்போட்டுசோ

வில் வைத்துக்கொண்டு வேருகடி தூளெடுத்து வெந்நீரிற் போட்டருந்த சுகமாய் பேதியாம் ஆயாசமிராது,

இரத்தபேதிக்குசூரணம்.

கடுக்காப்பு	விராகனிடை	க
லவுங்கப்பட்டை	,,	க
கிராம்பு	,,	க

இவைகளை சிவக்கவறுத்து பொடித்துசூரணித்து ஒன்றாய்க்கலந்து கூ-பங்காகப்பிரித்து பசும் வெண்ணெயில் குழைத்துசாப்பிடவும் சுவஸ்தமாம் காரமில்லாத பொசிப்பெடுக்கவும்,

தீபனச்சூரணம்,

சுக்கு	பலம்	அரை	சவாச்சாரம்	பலம்	அரை
திப்பிலி	,,	,,	சத்திசாரம்	,,	,,
மிளகு	,,	,,	பூநீறு	,,	,,
சிறுதேக்கு	,,	,,	பெருங்காயம்	,,	,,
ஓமம்	,,	,,	இந்துப்பு	,,	,,
சித்திரமூலவேர்பட்டை	,,		பஞ்சலவணம்	,,	,,

இவையாவும் யிடித்து சூரணித்து சீசாவில் வைத்துக்கொண்டு திருநடிபிரமாணம் யெடுத்து வெந்நீரில்போட்டுக் குடிக்க மந்தம்அஜீர்ணம் இவையாவும் போக்கும் பசிதீபன முண்டாம்.

இங்குளாதிச்சூரணம்

பெருங்காயம்	விராகனிடை -	க	ஜாதிக்கா	விராகனிடை -	ரு
வசம்பு	,,	உ	கடுக்காய்	,,	சா
[illegible]	,,	ங	[illegible]மூலம்	,,	எ
சுக்கு	,,	ச	கோஷடம்	,,	அ

இவையாவுங்கூட்டி சூரணித்து வேளைக்கி கூ-விராகனிடையாகக்கொண்டு வெந்நீரில் குழப்பிசாப்பிடவும் குன்மசாந்தியாம்சிலவாய்வுகளை கண்டிக்கும்.

க்ஷயசூரணம்,

இலைக்கள்ளிவேரின் மேற்றோலைக்கிழித்தெடுத்து ரவியிலுலர்த்தி யிடித்து சூரணித்துவைத்துக்கொண்டு விராகனிடை சூரணத்தை நெய்யில் குழைத்து சாப்பிடவும் ௩-௫-௭-௯-௧௧ நாள் விதமாயுண்ண க்ஷயவலிநீங்கும் மற்றயிருமல் யாவும் சாந்தியாம்,

இருமற்சூரணம்,

ஆடாதோடை	பலம்	ரெண்டரை
கடுக்காய்	,,	,,
கண்டங்கத்திரி	,,	,,
துளசி	,,	,,
அதிமதுரம்	,,	,,

இவைகளை யிடித்துப்பொடித்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு திருகடிபிரமாணம்பெடுத்து நெய்யில்குழைத்து சாப்பிடவும் இப்படி இருமண்டலம் கொள்ள இருமல் பீனி கபம் கோழை இவைகள் சாந்தியாம்,

தனிமூலிச்சூரணம்,

நாறுவருடத்திய வேப்பமரத்தின்றுளிரும் அம்மரத்தினதுவேரின் மேற்பட்டையும் சமமாய் கிருத்தெடுத்து உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்து சமவிடை சக்கரைகலந்து சீசாவில் வைத்துக்கொண்டு வேளைக்கு (கால்றுபிடையாக) இருவேளையும் சமநாள்கொள்ளவும் குதம்உடையும் தூலதேகம் களையும் மேகங்களைக்கண்டிக்கும் வாய்வுயென்பவைபெல்லாம் உடல்கடந்தோடும் [illegible]யாம் கண்ணொளியுண்டாம் காயசித்திக்கு சமானமென அநேக பண்டிதரும் சொல்லுவார் இச்சாபத்தியம்.

[illegible]த்சாக்கினிசூரணம்,

மருள்கிழங்கு	பலம்	௫
புளிக்கருணைகிழங்கு	,,	௧

காட்டுக்கருணைக்கிழங்கு	,,	௧
பிரண்டைக்கிழங்கு	,,	௧
சித்திரமூலவேர்பட்டை	,,	௧
பரங்கிச்செக்கை	,,	௧

இவையாவும் வெய்யலிலுலர்த்திஇடித்து சூரணித்துவஸ்திரகாயஞ்செய்து சீசாவில்வைத்துக்கொண்டு தினம் காலையில் ௪-விராகனிடை சூரணம்பெடுத்து பசுப்போரு ஆழாக்கில் கலந்து குடிக்கவும் இப்படி ௰-உம் நாள்கொள்ள வல்லைக்கட்டி காச்சல்கட்டி நீர்கோவை குன்மம் இவைபோம் இச்சாபத்தியம்.

சூலைச்சூரணம்,

சித்திரமூலம்	பலம்	௧	ஏலம்	பலம்	அரை
ஓமம்	,,	அரை	சுக்கு	,,	௧
சிறுதேக்கு	,,	,,	திப்பிலி	,,	௧
இந்துப்பு	,,	,,	மிளகு	,,	௧
லவணம்	,,	,,	எவாச்சாரம்	,,	௧
காயம்	,,	,,			

இவையிடித்து பொடித்து வஸ்திரகாயம்செய்து சீசாவில் வைத்துக்கொண்டு மூவிரல்சூரணம்பெடுத்து வென்னீர்ப்போட்டுக்கலக்கிசாப்பிடவும் சூலைகட்டு தீரும் தினமுண்டாகும் வாய்வுஅண்டாது தேகம்லேசாயிருக்கும் இச்சாபத்தியம்.

வால்மிளகுசூரணம்.

வால்மிளகு	விராகனிடை	௫
சீரகம்	,,	௫
கொத்தமல்லி	,,	௫
கற்கண்டுதூள்	,,	௫

இவையிடித்து சூரணித்து கற்கண்டுதூளும் கூட்டி வெள்ளையில் ௪ விராகனிடைசூரணமிட்டு குழப்பி சாப்பிடவும் இப்படி அந்திசந்தி ௰-நாள்கொள்ள வெள்ளை விழ்தலும் தீரும் சூடு அனலைமேகாங்கை நீர்சுருக்குதீரும் இச்சாபத்தியம்.

மதனகாமேசுரசூரணம்.

அதிமதுரம்	பலம்	க
அமுக்கனுங்கிழங்கு	,,	க
பூசுணையின்வேர்	,,	க
நரிபயற்றம்வேர்	,,	க
உளுந்துசெடியின்வேர்	,,	க
மூந்திரிவேர்	,,	க
நிலப்பனங்கிழங்கு	,,	க
நெல்லிவித்து	,,	க
இல்வன்பிசின்	,,	௩
முருங்கைப்பிசின்	,,	௩

இவையாவும் யிடித்து சூரணித்து அவ்விடைக்கு அறையினிசீனிகூட்டி கலந்து சீசாவில்வைத்துக்கொண்டு உ-விருகவிடை சூரணமெடுத்து காச்சியதேனிற் குழைத்துத்தின்னவும் தின்னவுடன் ஆழாக்குபால் சாப்பிடவும் மாலை கூ-மணிவேளையாக 20-நாள் தின்னவும் புகை புளி போகம் லாகிரிகூடாது உக-வது நாள் போகிக்கவும் மிகுந்த யின்பத்தோடு லேகில் கட்டுவிடாது தாதுபுஷ்டியாம்.

மாங்கொட்டைசூரணம்.

மாங்கொட்டை	பலம்	உ
வெந்தியம்	,,	க
கருவேப்பிலை	,,	க
மாதுளம்பழத்தோல்	,,	க
சுண்டக்காய்வற்றல்	,,	க

இவையிடித்து சூரணித்துவைத்துக்கொண்டு பெருமைத்தயிரில் வ-பலம் சூரணமிட்டுக்கலக்கி சாப்பிட சீதபேதி நீங்கும் இருவேளையும் உ-௩-நாள் கொள்ளவும் காரமாகாது.


பித்தத்திற்குசூரணம்,

சீரகம்	கழஞ்சு	௩
அதிமதுரம்	,,	௩
இஞ்சிஉலர்த்தியது	,,	௨
திப்பிலி	,,	௨
ஏலம்	,,	௧

இவைகளைப்பிடித்து சூரணித்து வஸ்திரகாயம்செய்து சக்கரை ௪-கழஞ்சு கூட்டிக்கலந்து சிசாவிலவைத்துக்கொள்ளவும் திருகடிசூரணம் யெடுத்து தேனிற்குழப்பித் தின்னவும் பித்தம்நாற்பதும்பரந்தோடிப்போம் இருவேளையுமாக ௰-௨௰-௩௰-௪௰-நாள் வீதம்கொள்வவும் இச்சாபத்தியம்,

சூ ர ண வ கு ப் பு

முற்றிற்று,



கடவுள் துணை.

பத்தரவது

பலரோகவகுப்பு.

விரைவாதவாய்வுக்கு.

ஆதண்டைவேர்	பிடி	க
வெண்காரம்	,,	க
மிளகு	,,	க
காயருவிவிரை	,,	க

இவையாவும் ஒன்றாயிட்டு அரைத்துபுன்னக்காய்விதம் இருவேளையும் ரு-எ நாள்கொள்ளவும் வாதத்தால் வீங்கியவிரைவிக்கம் சுவஸ்தமாகும் இச்சாபத்தியம்.

அண்டவாய்வுக்கு,

கருஞ்சீரகம் பூண்டு தேன்விட்டரைத்து கழற்சிக்கா யளவு இருவேளையும் ம-நாள்தின்னவும் அண்டவாய்வு தீரும்,

வாதகுன்மத்திற்கு.

பாப்பாரமுள்ளி தும்பைநொச்சி திப்பிலி பூண்டு காயம்நல்லவெல்லம் ஓமம் யிலைகளை சமன்கொண்டு மிதிபாகல் சாறுவிட்டு அரைத்து கெச்சக்காய்விதம் இருவேளையும் ரு-எ நாள் கொள்ள வேண்டியது.

சீதசுரத்திற்கு.

மிளகு (௨) விராகனிடை பொடித்து தயிர்விட்டுபிசைந்து பிரகுகொஞ்சம் நெய்விட்டு மத்தித்துமூன்றுவேளையாக பாகித்துத் தின்னவும் உடனே வெந்நீர்சாப்பிடவும்.

விரைவாதத்திற்கு குடி நீர்.

கடுக்காய்	பலம் -	க
கழற்சிப்பருப்பு	,,	க
சுக்கு	,,	க
முடக்கொத்தான்	,,	க

இவைநாலும் உரலிலிட்டு பஞ்சுபோல் யிடித்து படி ஜெலம்வைத்து கால்படியாகயிரக்கி இருவேளைபாகித்து சாப்பிடவும் இப்படி (௩) நாள் ஆறுவேளை கொள்ளவும்.

சூசிகவாய்விற்கு.

பருத்திக்கொட்டை	பலம்-	அரை
கையான்யிலை	,,	அரை
ஏலம்	,,	அரை
கொளுஞ்சை	,,	அரை
சுக்கு	,,	அரை
திப்பிலி	,,	அரை
மிளகு	,,	அரை
எவாச்சாரம்	,,	அரை

இவையாவும்யிடித்து வஸ்திரகாயம்செய்து இஞ்சி சூரணத்தில் நாலுக்கொருபங்கு ஊமத்தவிதை சூரணம் கூட்டி கலந்துவைத்துக்கொண்டு பனைவெல்லத்தில் கழற்சிக்காயளவு சூரணத்தைபிசைந்து சாப்பிடவும் (௫) நாள்கொள்ளவும் இச்சா பத்தியம்.

நளிர்குளிருக்கு.

பசும்மோரில் ஊறினமிளகு அரைபலம் யெடுத்து துளசியிலை ஒருபிடி கற்பூரம்விராகன் (க) இதைவெந்நீர் விட்

டரைத்து இருவேளையாக பாகித்து கொடுக்கவும் இப்படி (உ-கூ) நாள்கொடுக்கவும் இச்சாபத்தியம்.

௺மேகசுரத்திற்கு.

நிலக்குமிழ்வேர் சுக்கு பனைவெல்லம் இம்மூன்றும் சமன்போட்டு கியாழம்வைத்து, வெட்டொன்றாக்க இருவேளையும் (சு-டு) நாள்கொடுக்கவும்.

இருமல் (சு) க்கும்.

கண்டங்கத்திரிவித்து	பலம் - அரை
தேத்தான்வித்து	,, அரை
தும்ராஷ்டகம்	,, அரை
திப்பிலி	,, அரை

இவைநான்கும் சூரணித்து (உ) பலம் தேன் அடுப்பேற்றி இச்சூரத்தைக் கொட்டிக்கிளரி யிரக்கவும்தேன்போதாவிட்டால் துளிதுளியாய்விட்டுக்கிளரவும் கொட்டைப்பாக்குவீதமாய் இருவேளையும் (ம) நாள்கொள்ளவும்.

நேத்திரவாய்விற்கு.

வெள்ளுள்ளி வசம்பு குப்பைமேனியிலை இவைகளை ரவியில்விட்டு யிடித்து சாறுபிழிந்து உச்சியில் தேய்த்து செய்க்காய் கொதிப்பித்தெடுத்து தலைக்குவார்க்கவும் இப்படி (கூ) நாட்கொருதகுதி (டு-சு) விசைவார்க்கவும் உத்தமமாம்.

கண்புகைச்சலுக்கு.

புளியாரையிலை வெங்காயம் சீரகம்இவைகயிடித்து சாறுபிழிந்து கண்ணிற் குத்திவரவும் தீரும்.

நமைசொறிக்கு.

ஆவாரம்பட்டை (௧) பலம் யெடுத்து நெகிழ வரைத்து (ஐ) படி நீராகாரத்திலரைத்துக் கொடுக்கவும் இப்படி (௩) நாளிய சொறிதமை யிவைதீரும் ஆனால் (௨-௩) விசை பேதியாகும்.

பேய்சொறிக்கு.

இந்துப்பு பொடித்து நெய்விட்டரைத்து தலைமுதல் பாதமட்டில் பூசிவைத்து மறுநாள்காலை சீக்காய்கொதிப்பித்து அல்லது இலுப்பைப்கட்டி சுட்டரைத்து தலைமுழுகச் செய்யவும் தீரும்.

கால்வெடிப்புக்கு.

ஆலம்பால்	பலம் -	வ
மெழுகு	,,	வ
மஞ்சள்	,,	வ
அரக்கு	,,	வ
புராவெச்சம்	,,	வ
கடல்நுரை	,,	வ

இவையாவும் காடிவிட்டரைத்து பீங்கான் கோப்பையில் வைத்துக்கொண்டு (௫) தினம் பூசிவர வெடிப்புமாறும்.

காலிற்புண்ணுக்கு.

வங்காளபச்சை	பணவிடை -	௨
ஆவாரம்பட்டை	,,	௨
பற்பாடகம்	,,	௨
மிருள்ளி	,,	௨
குதம்	,,	௨

இவையாவும் கல்வத்திலிட்டு மைபோலரைத்து வெண்ணெயிற் குழப்பி சீலையில்தடவி காலிற் காணும்புண்களின் மேற்போட்டுவர ஆறிவிடும்.

ஓட்டின புண்ணுக்கு.

செங்கொட்டை	விராகநிடை -	க
மயில்துத்தம்	,,	க
வசம்பு	,,	உ

இவைகளையிடித்துப் பொடித்து நல்லெண்ணெயிற் குழப்பி புண்களின் மேற்றடவிவரத் தீரும்.

வெள்ளைக்கொருக்கு அரையாப்புகட்டிக்கு.

சரக்கொன்றைபட்டை சீரகம் இரண்டும் சமன்கொண்டு அரைத்து புன்னைக்காய்விதம் தின்று ஆறுநாக்கு மோர்சாப்பிடவும் கடும்பத்தியம்.

வெள்ளைக்கு.

மிளகும் வெள்ளருகும் சமன்கொண்டரைத்து புளியங்கொட்டை பிரமாணம் இருவேளையும் (ரு-டு) நாள் தின்னவும் வருத்தஉப்பு சிட்டபுளிகூட்டவும்.

மஞ்சள் வெள்ளைக்கு.

முத்தின பிரண்டையை யிடித்து சார் பிழிந்து அதற்குசமன் நல்லெண்ணெவிட்டு கலந்து (வீசம்படி) பிரமாணம் சாப்பிடவும் இப்படி மூனுநாள் கொள்ளவும் கடும்பத்தியம்

காமாலைக்கு.

எருமைசாணியின்பால் எருமைத்தயிர் இரண்டுங்கலந்து சீரகம் வெங்காயம் சமன்சேர்த்து டிை தயிராலரைத்து எருமைப்பாலில் கலக்கிசாப்பிடவும்.

நரம்புசிலந்திக்கு.

எருக்கன்வேர்க்கு (கூம) யெடுத்துவந்து பெருங்காயம் சமனிகூட்டி அரைத்து (ரு-எ) நாள் கொள்ள நரம்புசிலந்திதீரும்.

காதுநோய்க்கு.

சுக்கு	உரூக்கிடை	௧
திப்பிலி	,,	௧
கோஷ்டம்	,,	௧
சயிந்தலவணம்	,,	௧
முத்தக்காசு	,,	௧
வசம்பு	,,	௧
உள்ளி	,,	௧
கருர்காய்	,,	௧
(௧) யெருக்கிலைச்சார்		

நல்லெண்ணை ஒருபலம் யெடுத்து ஷை சார்விட்டு மற்ற மருந்துகளியாவும் யிடித்து வஸ்திரகாயம் செய்துபோட்டு காச்சியிரக்கி காதில் (௨-௩) துளிவிட எவ்விதகாது நோயும் தீரும் (௨-௩ வேளைவிடவும்

பெரும்பாட்டிற்கு

தென்னம்பாளையின் பூவெடுத்து அதில்பசும்பால்விட்டிடித்து பிழிந்து (ஞ) படியாக(௩) நாள்குடிக்கவும் பெரும்பாடுதீரும்.

பழையபெரும்பாட்டுக்கு.

செளதும்பையும் குருவரிசியும் சமனிடைகொண்டிடித்துமாவாக்கி பனைவெல்லம் போட்டு பிசைந்து புன்னைக்காய் விதம் (௩) நாள் ஆறுவேளைதின்னவும் தீரும்.

அதிசுவாசத்திற்கு.

நாரத்தம்பழ மேற்றோல்நீக்கி நடும்பழத்தின் சதையை யெடுத்துப்பிழிந்து அந்தசாற்றில் திப்பிலியைப் பொடித்துப் போட்டு மத்தித்து தின்னவும் (ரு-எ-ம) நாள்தின்னசுவாசகாசமிருமல் சுவஸ்தமாம்

கால்வெடிப்புக்கு.

சுண்ணாம்புகல் ஒருபடிகொண்டுவந்து பாண்டத்திலிட்டு பசும்பால் நல்லஜெலம் வகைக்கு அரைப்படிவார்த்து அடுப்பேற்றி கொதிக்கவைத்திறக்கி காலுக்கு வேதுபிடிக்கவும் இப்படி இருவேளையும் மூன்றுநாள் ஆறுவேளையாக வேதுபிடிக்கையில் கால்வெடிப்புமாறும்;

இரைப்பிருமலுக்கு.

உயர்ந்த பிராந்தி ஒருபாயிண்டு கொண்டுவந்து வாய்சிறுசாயுள்ள புட்டியிலூத்தி நாட்டுவெண்காரம் இரண்டுபலம்பொடித்துப்போட்டு கஸ்தூரி அரைவிராகனிடை. போட்டு குலுக்கிபிருவாய் கார்க்கடைத்து வைத்துக்கொண்டு மறுநாளுதையத்தில் தேக்கரண்டியளவு யெடுத்துசாப்பிடவும இப்படி ஒருமண்டலங்கொள்ள இரைப்பிருமல் சுவாசம் காசம் இவைதீரும் இச்சாபத்தியம்....

தீராப்பெரும்பாடுக்கு.

நாவல்மரத்தின்றோல் அத்திமரத்தின்றோல் வகைக்கு ஒருபிடி கொண்டுவந்து பஞ்சுபோலநருக்கி அரைப்படி ஜெலத்திலிட்டு (ஹ)படியாகக்காச்சி வடித்து சாப்பிடவும் இப்படி (௩) நாள் (௬) வேளைகொள்ளவும் சாத்தியாம்.

பெரும்பாட்டுக்கு வேறு.

நாவல்பட்டை ஒருபிடி யெருமைமோரில்போட்டு யிடித்துபிழிந்தநீரில் அதில்பட்டைத்தூள் ஐந்துவராகனிடைகலந்து மூணுநாள் ஆறுவேளை சாப்பிடவும் தீரும்.

தாதுபுஷ்டிக்கு.

பேரீச்சங்காய்		௨௰
குங்கிலியம்	பலம்	௧
கிராம்பு	,,	௪

ஜாதிக்காய் ,, க
ஜாபத்திரி ,, க

இவைகளையிடித்து தூளாக்கி வைத்துக்கொண்டு ஷை பேரிச்சங்காயைகீறி விதையெடுத்துவிட்டு யிடித்துவைத் திருதூளைவொவ்வொருகாயிலும் புகட்டி நூநால்கட்டி பசும் நெய் அரைப்படி அடுப்பேற்றி ஷை காய்களைப்போட்டு வே கவைத்து யிரக்கும்போது தேன்கால்படி ஊற்றிக்குலுக்கி யிரக்கிவைத்துக்கொண்டு தினம் ஒருகாய்வீதம் (சய) நாள் தின்னவும்இந்த நாற்பதுநாளும் பெண்மயக்கம் கூடாது லா கிரியாகாது மீக்கருவாடு சேரப்படாது புகைசுருட்டு தொடப்படாது.

வீரியவிர்த்திக்கு.

முருங்கைப்பூ விராகனிடை - க
சாபத்திரி ,, க
காயம் ,, க
அபின் ,, க
சுத்தித்துபொரித்தவெண்காரம் ,, க

இவைகளை கல்விலிட்டு தேன் துளிதுளியாய் விட்டரைத்து (யச) உருண்டையாக செய்து தினம் இருவேளையாக (எ) நாள் கொள்ளவும் இரவில் புளிப்பாகாது பால்விட்டு அன்னமருந்தவும் புகை புளி போகம் லாகிரி கவிச்சு இதுக ளாகாது தித்திப்புபண்டங்கள் யேராளமாய்த்தின்னவும் எட்டா வதுநாள் புணரவும்.

புணர்ச்சியில் பிரியமில்லாதவர்க்கு

உடைக்காத பச்சைசக்கடலையை நல்லெண்ணெயில் நன்றாய்வூரவைத்து ய-உய-கய-கடலைவீதம் அந்திசோத்திற் தின்றுவரவும் இப்படி ய-உய-கய-நாள்தின்னவும்.

—*—

வேறுவகை.

சிரகமும் தேத்தான்கொட்டையும் சிறுகீரைவேறும் சமஎடை கொண்டுவந்து இளநீரில் ஊறவைத்தரைத்து செச்

சக்கரய்வீதம்தின்னவும்இப்படி ம-உம-இருவேளையும்கொள்ளவெள்ளை முதலானதும் நீங்கும் சூடு அகலும் புணர்ச்சிக்கு மகா ஆவல்கொடுக்கும்.

வெள்ளைபிரமியத்திற்கு.

சங்குப்பியிலைரசம் அரையாழாக்கு அதில் பசுந்தயிரின் ஏடுபோட்டுப்பிசைந்து காலையில் மூன்றுநாள்தின்று கம்பத்தியமிருக்கவும்.

சீழ்பிரமியத்திற்கு.

அத்திப்பட்டை ஆவரம்பட்டை பூவரசம்பட்டை நாவல்பட்டை கொன்றைமரப்பட்டை இவைகள் சமஎடைகொண்டுவந்திடித்து சூரணித்து தேனில்குழைத்துத் தின்னவும் இருவேளையும் (ரு ம) நாள் கொள்ள தீரும்.

சகலபிரமியத்திற்கும்

டை மருந்துகள் சூரணமாயாவது அல்லது சாறாகவாவது பிழிந்து சமயிடை விளக்கெண்ணைவிட்டு பரிங்கிச் செக்கை தான் ஒருபலம்போட்டுக் கலந்து காச்சிவடித்து (எ-கூ) நாள் வீதமாக சாப்பிடவும் இச்சாபத்தியம்.

சிறுநீரில்ரத்தங்கண்டால்

நெருஞ்சிவிரை ஒருபிடியெடுத்து செவ்விளநீரிலூறி அரைத்து கரைத்துக்குடிக்கவும் இருவேளையும் (ரு-ம) நான்நாள் கொள்ளவும்.

வெகுமூத்திரத்திற்கு.

வெள்ளாட்டிரச்சியைக் கொண்டுவந்து டை நோயாளியின் மூத்திரத்தில் ஒரு ஜாமம் ஊறவைத்து பின்பெடுத்து கழுகிகாரசாரமிட்டு கறிசமைத்து தின்னவும் இப்படி விடாமற்றினம் (ம-ரு) நாள்தின்னவும்.

—※—

நீரொழுக்கிற்கு.

என்ருப்புண்ணுக்கு கோவையிலே சரியிடை கூட்டி அறைகாரமிட்டு புரட்டி மூணுநாள் கொடுக்கவும் சாந்தியாகும்.

படுக்கையில் சிறுநீரிறங்கலுக்கு,

படுக்குமிடத்தில் அரிசிதெளித்து அதன்மேல் பாய்போட்டுபடுக்க சிறுநீர்விட்டால் அன்னீரிலூறிய அரிசியைகாலேயிலெடுத்து அறைத்து அடைதட்டிச் சுட்டுத்தரவும் இப்படி (கூ-ஞ) நாள் கொடுக்கவும்.

இரத்தமூலத்திற்கு.

யெருக்கன்கிழங்கு	பலம் -	க
புழுங்கலரிசி	,,	க
உளுந்து	,,	உ

இம்மூன்றும் அறைத்துப் புளிக்கவைத்து தோசைசுட்டு யிருவேளையும் கொடுக்கவும் (கூ-ஞ) நாள் கொள்ளவும்.

வெட்டைக்கு.

தேங்காய்ஒன்று கொண்டுவந்து வோடைநீக்கி புங்கம்வேர்ஒருபலம்போட்டு உரலிலிட்டுயிடித்து பால்பிழிந்து கால்அறையாழாக்குவீதம் (கூ) நாள் கொடுக்கவும்.

பக்கசூலைக்கு.

கள்ளிக்கொழுந்தின்சார்	விராகனிடை -	க
பூண்டுதயிலம்	,,	க
காயம்	,,	க

இம்மூன்றுங் குழைப்பிக்கொடுக்கவும் இப்படி (கூ) நாள் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

மேகத்துக்கு.

பச்சைவெள்ளருகு	பலம் -	௨
பழம்பருக்கல்லிலி	,,	௧

இவையிரண்டையும் அரைத்து பசுந்தயிரில் கலக்கி உள்ளுக்கொண்டு ஒருஆழாக்கு தின்னவும். இதை இரட்டையாக இருவேளையும் கொடுக்கும்போது உப்பில்லாச் சோறு தின்னவும் இப்படி (௩) (௫) நாள் தின்னுவரவும் தீரும்.

இரத்தக்கழிச்சலுக்கு

சிவனார்வேம்பை மெல்லியதாக அரைத்து (௧) பணவிடை எடுத்து பசும்பால் ஆழாக்கில்போட்டு காய்ச்சி எலுமிச்சம்பழம் ஒருபத்தைப்பிழிந்து சாப்பிடவும் இப்படி (௩) நாள் கொள்ளவும் இரத்தக்கழிச்சல் மாறும்.

அஜீரணத்திற்கு.

முருங்கைப்பட்டை	பலம் --	௩
வெள்ளருகு	,,	௨
சுக்கு	,,	௨
ஓமம்	,,	௨
கற்றாழஞ்சோறு	,,	௩

ஒருபடிநீர் சட்டியிலூற்றி இம்மருந்துகளை யிடித்துப் போட்டு ஆழாக்கு அளவாக சுண்டக்காய்ச்சி வடித்து உதரத்து வலிக்கு ஒருவிராகனிடை நாள்போட்டு கூடும்பால் விட்டுசாப்பிடவும் அஜீரணம் மலபந்தம் இவைதீரும்.

இருவாய்க்கட்டுக்கு.

நாவற்பட்டையை இடித்துக்காயவைத்து சூரணித்து வெந்நீரிற் பிசைந்து சாறுபிழிந்து நீரைக் காய்ச்சி ஆறாக்குடியாறுமாகக் காய்ச்சி இருவேளையும் குடிக்கவும்.

இரத்தக்கட்டிவீக்கத்துக்கு.

அழிஞ்சிவேர்ப்பட்டையை காடியையிட்டரைத்து அனலில்வெள்ளிலையின் மேல் பற்றுப்போட வீக்கம் தீரும்.

சேணக்கழிச்சலுக்கு.

மாதளம்பிஞ்சு கொன்னைப்பிஞ்சு [illegible] இவைகளுக்கு சம் பூண்டு சமமாயெடுத்து அரைத்து புன்னைக்காய்ப்ரமாணம் கொ டுக்கவும் [illegible] காலையில் மோரில் கொடுக்கவும் இப்படி இ ருவேளையும் கொடுக்க கழிச்சல் தீரும்.

சீதபேதிக்கு.

கஸ்பாலை முருக்கன்பட்டையை அரைத்து கன்னிடைய எருமைத்தயிரில் மூன்றுவேளையும் தின்னவும் இப்படி (௩) நாள் குணப்படுமேல் கொள்ளவும்.

தேகக்கழிச்சலுக்கு.

பேதாளு (காசப்பலம்) கொண்டுவந்து நெருப்பில்போட்டு வெரியும்பின் அதிற்சிறுப்பி நாரைப்பேரியின் கொட்டால் பொ டிபோலாகும் அதைக்கொண்டுபோய் ௨ - பலம் கட்டி குடிநீரில் ஒ ன்றாய்கொரி மெல்லியசல்லாவில் வடிக்கட்டி சாப்பிடவும் இப் படி ஒருமண்டலம் சாப்பிடவும்.

வெள்ளைக்காளத்திற்கு.

சக்கரை	களஞ்சி	௪
ஏலம்	"	௩
மதுரம்	"	௩
திப்பிலி	"	௨
இஞ்சி	"	௨

இவைபொடித்து ஆப்பாலில்கலந்து சாப்பிடவும் தவிச்சல் வெள்ளைக்காளம் மயக்கம் பித்தம் இவை தீரும்.

அதிசாரத்திற்கு.

விளாம்பிசினியை பொடித்து வேண்டியமட்டும் எடுத்து சரியிடை நெற்பொரி பொடித்துப்போட்டு தேனில் குழைத்துத் தின்னவும் இருவேளையும் கொள்ளவும்.

சைவர்வாதத்திற்கு.

பச்சைதுவரை சமூலம்கொண்டுவந்து யிடித்து சார்பிழிந்து ஷெ செடியின்வேர் ஒருபிடியெடுத்து சாற்றுலரைத்துகுடித்துவர ௫-நாளில் வாதம் தீரும் இச்சாபத்தியம்.

விப்புருதிக்கு.

சித்தாமணக்குப்பருப்பு மஞ்சள் மிருள்ளி மூன்றும் சமஎடைகொண்டரைத்து எருக்கன்பாலில் குழைப்பித்திரட்டி உமிக்கும்பியில் புதைத்து வெந்தபிறகெடுத்து உண்ண விப்புருதிபோம்.

மேககற்பம்.

கற்றாழைமடல் சோற்றையெடுத்து நல்லஜெலத்தில் யேழுவிசைகழுவி புன்னைக்காயளவெடுத்து பள்ளங்கோலி பணவிடை கல்லூர்பற்பம் வைத்துத்தின்னவும் இப்படி ௭-நாள் காலையில் தின்னவும் மேகச்சூடுதணியும்.

மேகரோகத்திற்கு

தேங்காய்ப்பாலில் சிறுகுறிஞ்சான் வேரையரைத்து புன்னைக்காய்விதம் ௭-௰-நாள் தின்னவும் மேகசாந்தியாம்.

கபரோகந்திர.

விரைநீக்கிய கடுக்காய்ப் பொடிசெய்து வஸ்திரகாயமிட்டெடுத்து கையான்சாற்றில் மத்தித்து கால்பலம்விதமாய் நாற்பதுநாள் தின்னவும்.

வயித்தியமுறைகள்

முற்றிற்று.



உ

சிவமயம்.

வயித்திய கைமுறையின்

விஷய அட்டவணை.

விஷய அட்டவணை.

விஷய அட்டவணை

முற்றிற்று.

உ

தேவிசகாயம்,

—(✤)—

முக்கியமாய் கவனிக்கவேண்டிய

அனுபோகவயித்திய விளம்பரம்.

ஜெகந்நாதஸ்தலம் கோஷாயிசுவாமிகளின் பிரதமசிஷ்யராகிய செழுபணை நல்லண்ணபரதேசியவர்களும், மேற்படி பரதேசியாரவர்கள் மருகரும் மாணாக்கருமாகிய சிறுமணலூர் முனிசாமி முதலியாரால் ஷை சித்தப்புருஷருக்குச் சமானமாகிய புண்ணியவான்களின் அனுக்கிரகத்தால் எழுதப்பட்ட (அனுபோகவயித்திய பிரம்மரகசியமென்னும்) நூலானது வயித்தியரைவேண்டாமல் தாங்களேசெய்துகொள்ளத்தகுந்த முன்னூறுமுறைகளடங்கிய முதற்காண்டம், 2 - வது, காண்டம், 3 - வதுகாண்டமென்று முறையே அச்சிட்டு (காண்டம் 1-க்குவிலை அணா-8,) ஆக விற்பனைசெய்து வருவதை அந்நூலையனுசரித்து அதிலுள்ள முறைகளை கையாண்டுவரும் புண்யவான்களுக்கும், இதரமான அனேகஜெனங்களுக்கும் சுமாரு 3-4 - வருடமாக பிரசங்கமாகத் தெரியவரும்.

இதுகாறும் நமது அனுபோகவயித்திய பிரம்மரகசியத்தைக்கண்ணுற்றவரும் கேள்விப்பட்டிருக்கும் மற்றவரும் கவனிக்கவேண்டியது. ஜெகன்னாதஸ்தலம் கோஷாயிஸ்வாமிகள் அனுக்கிரகத்தின்படி நல்லண்ணபரதேசி மருகர் சிறுமணலூர் முனிசாமி முதலியாரால் எழுதப்பட்டு பு, சு, குப்புசாமிமுதலியாரால் சுந்தரவிலாசஅச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டதும், (80) சயிட்டுள்ளதும் இளஸ்கடிதமும் கலிக்காபயின்டுமுள்ளதாய் பார்வையிட்டு வாங்கும்படி பிரார்த்திக்கின்றேன்.

தற்காலம் ஆரிய அனுபோகவயித்தியமென்னும் காதகற்ற நற்குணமாகிய கமலவாணி கண்மணிகளின்வரம்பெற்ற வாழ்க்கையைப்போல அவுஷதபாகங்களின் அளவுகளை யேறுமாறாக்கி நிறைகளின் நிதானங்குறைத்தும் முறைகளை முன்பின்னாக்கி, கைபாகத்தை பொய்பாகமாக்கி, கெட்டிக் கலிக்காபயின்டை மட்டி அட்டைபயின்டிலும் உயர்ந்ததாளை அயர்ந்ததாளிலும் அந்தமான பதிப்பை மந்தமானபதிப்பாகம், அச்சிட்டு நிதானவிலையின்றி மனம்போனபடி விற்பனைசெய்துவருகின்றனர்,-இவ்வாறு பின்னப்படுத்தி அச்சிடுவதற்குக்காரணம் யாதெனில் ஷை அனுபோகவயித்தியபிரம்மரகசியம் கெவர்ன்மென்டு சட்டப்படி (ரிஜிஸ்தர் காபிரயிட்டு செய்திருப்பதால் அப்படியேஅச்சிட்டால் பினல்கோர்ட்டு கேழ்விக்கு ஜவாபுசொல்ல நேரிடுமென்ற கருத்துள்ளவர்களாய் சுத்த அபாசமாகவும் அந்தவிகாரமாயும் பேரை மாறுதல்செய்தும் அச்சிட்டிருக்கின்றனர், இதைக் கவனிக்கவேண்டுவது திண்ணம் திண்ணம்,